# அரசு ஊழியர்

ஜூன் 2021

மலர் : 42 இதழ் : 6

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு
ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு
மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன்,
இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி
முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்

### மரண வணிகம்

தரகரின் கையில் தராசு தந்தோம்
மந்தியின் கையில் மாலை கொடுத்தோம்!
மருத்துவ மனையிலும் இடமில்லை
மயானக் கரையிலும் இடமில்லை!

மக்களின் வாழ்க்கை மார்க்கட் ஆனது
மருத்துவம் மாபெரும் வணிகமானது
ஊசி மருந்துக்கு விலை வைத்து - மக்கள்
உயிர்களுக்கு இங்கே உலை வைத்தார்!

கங்கை நதியில் பிணங்களின் பயணம்
ககன வெளியெங்கும் இழப்பின் துயரம்
எட்டுத் திசையிலும் மரண ஓலம்
காலம் கற்றுக் கொடுக்குதே கொடியபாடம்!

- ரவிச்சந்திரன்



தலைவர் மடல்

# மு.க.ஸ்டாலின் - போர்க்களமும், பூங்கொத்தும்!

**நா**ம் நினைத்தது போலவே அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை ஒரு பொருட்டாக நினைக்காத அதிமுக ஆட்சி வீழ்த்தப்பட்டிருக்கிறது. 2003ஆம் ஆண்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது அப்போதிருந்த அதிமுக அரசு நடத்திய அதிகார துஷ்பிரயோகத்திற்கு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களாகிய நாம் 2006ல் கங்கணம் கட்டி பகை முடிக்கும் பணி முடித்த நாட்கள் இப்போதும் பசுமையாய் நினைவில் நிற்கிறது. இப்போது மீண்டும் அது ஒருமுறை நிகழ்ந்திருக்கிறது. பகை முடிக்கும் பணியின் இரண்டாம் பாகம் என்று இதை நாம் கூறிக்கொள்வது கூட பொருத்த மானதுதான். அரசு ஊழியர்களின் ஆசிரியர்களின் நலன்களை, உரிமைகளை மக்கள் நலன் சார்ந்த எந்த அரசும் புறந்தள்ளிவிட முடியாது. அப்படி சில அரசுகள் புறந்தள்ள நினைத்தால் அந்த அரசுகள் எவ்வாறு புறக்கணிக்கப்படும் என்பதற்கு திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் ஆட்சி நல்லதொரு சாட்சி. நாம் எந்த ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியையும் எதிர்க்கவும் இல்லை, ஆதரிக்கவும் இல்லை. அரசு ஊழியர்களின் நலன்களுக்கு எதிராகவும், உரிமைகளை பறிக்கும் வகையிலும், நியாயப்படி தரவேண்டிய உரிமைகளை தட்டிப்பறிக்கும் அரசுகள் எதுவாக இருந்தாலும் அவற்றை எதிர்த்தே அரசு ஊழியர்கள் நின்றிருக்கிறார்கள். அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நலன்களை காக்கும் அரசாங்கங் களை பாராட்டியிருக்கிறோம். அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடைப்பட்ட பாலமாக இருப்ப வர்கள் அரசு ஊழியர்கள். அரசாங்கத்தின் எந்தவொரு திட்டத்தையும் கடைக்கோடி பொதுஜனம் வரை கொண்டு சேர்ப்பவர்கள் அரசு ஊழியர்கள். ஆனால் இந்த நிதர்சனத்தை கடந்த அதிமுக அரசு உதறிதள்ளிவிட்டதோடு, அரசு ஊழியர்களை மூன்றாம்தர குடிமக்களாக நினைத்து செயல்பட்டதுதான் இவ்வளவு கோபத்திற்கு காரணமாக அமைந்துவிட்டது. திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தன்னுடைய ஆட்சிகாலத்தில் ஒருமுறைகூட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை அழைத்துப் பேசவில்லை. அவர்களுடைய பிரச்னைகளை




காது கொடுத்து கேட்கவில்லை என்பதுதான் அதிமுகவின் தோல்விக்கான வரலாற்றில் முக்கியமானதாக இருக்கும்.

மற்றொரு புறம் நாம் எண்ணியபடியே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மலர்ந்திருக்கிறது. திரு.மு.க.ஸ்டாலின், அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் எதிர்பார்த்தபடியே முதல்வராயிருக் கிறார். அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது நம்முடைய கோரிக்கைகளை கேட்டதோடு மட்டுமல்லாமல் அப்போதிருந்த அதிமுக ஆட்சி யாளர்களை அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அழைத்துச் பேசி சுமூக முடிவு எட்டும்படி கோரிக்கை வைத்தார். அது நடவாத நிலையில் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகளை பரிசீலித்து முடிவெடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார். மேலும் புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவது குறித்து திமுக ஆட்சிக்கு வந்ததும் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வராக திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்பதற்கு முன்பாகவே கொரோனா பெருந்தொற்றின் தாக்கம் அவருடைய அரசுக்கு பெரும் சவாலாக இருந்தது. இருப்பினும் களத்தில் இறங்கி அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், அதிகாரிகள், முன்கள அரசு ஊழியர்கள் என அனைவரையும் பம்பரமாக சுழல வைத்து பொறுப்பேற்ற நான்கு வாரங்களிலேயே கொரோனா பரவலை குறிப்பிடும் வகையில் கட்டுக்குள் கொண்டு வந்து மக்களுக்கு நம்பிக்கை ஒளி பாய்ச்சியுள்ளார். தன்னுடைய அரசின் முழு முதற்பணி கொரோனா வைரஸை கட்டுக்குள் கொண்டு வருவதுதான் என்றார். அரசாங்க கஜானா வழித்தெடுக்கப்பட்டிருக்கும் நிலையிலும் ஊரடங்கு உதவித் தொகையாக மே மாதம் ரூ.2000/- மற்றும் ஜூன் மாதம் ரூ.2000/- மற்றும் மளிகைப் பொருட்களை வழங்கிட உத்தரவிட்டு அது நடைபெற்று வருகிறது. கொரோனா பரவலுக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக உள்ள டாஸ்மாக் கடைகளை ஊரடங்கு காலத்தில் மூடி அதனால் அரசாங்கத்திற்கு வருவாய் இல்லாது போனாலும் பரவாயில்லை என்னும் மனஉறுதியோடு செயல்பட ஆரம்பித்திருப்பது தமிழக மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக உள்ளது.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்களைப் பொறுத்த வரை அகவிலைப்படி மேலும் ஓராண்டு காலத் திற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் தற்போதுள்ள இக்கட்டான சூழ்நிலையில் அரசாங்கத்தின் இந்த முடிவை அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் அனைவரும் மக்களின் நலன்கருதி ஏற்றுக்கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டிலும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கொரோனா நடவடிக்கைகளுக்காக அகவிலைப்படி நிறுத்தம், சரண்டர் நிறுத்தம் போன்றவற்றின் மூலமாகவும் ஒரு நாள் ஊதியத்தின் வாயிலாகவும் அரசுக்கு பலகோடி ரூபாய் பணத்தை அளித்திருக்கிறோம். தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலை மாறியதும் நம்முடைய உரிமைகளும், சலுகைகளும் நமக்கு திரும்பக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு நாம் அனைவரும் உயிர்காக்கும் மக்கள் பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொண்டு அரசாங்கத்தின் திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களுக்கு சென்று சேர அர்ப்பணிப்புடன் தொண்டாற்றுவோம். பதவியேற்ற ஒரு மாத காலத்திற்குள் மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயலாற்றி வரும் இந்த புதிய ஆட்சியின் சேவைகளும் செயல்பாடு களும் தொடர புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட முதல்வரையும், அமைச்சர்களையும், எம்.எல்.ஏ.க் களையும் வாழ்த்துவோம். பதவி ஏற்பதற்கு முன்பாகவே கொரோனா போர்க்களத்திற்கு வந்துவிட்ட இந்த அமைச்சரவைக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்போம்.

## மோடி - ஆணவம், அதிநவீனவாதம், அதிகாரத்துவ செயல்திறனின்மை!

*மற்றவர்கள் வெளிப்படையாகக் கூறத் தயங்குவதை டெலிகிராப் பத்திரிகை சற்றும் தயங்காது கூறியுள்ளது. கொல்கத்தாவின் அந்த தினசரி பத்திரிகை ‘நரேந்திர மோடி ராஜி னாமா செய்ய வேண்டும், அமித்ஷா ராஜினாமா செய்ய வேண்டும், அஜய் மோகன் பிஷ்ட் என்ற யோகி ஆதித்யநாத் ராஜினாமா செய்ய*




வேண்டும் என்று எளிமையாகக் கூறுவது சிறந்தது.'என்று கூறியது. இந்தப் பார்வை ஒன்றும் புதியதல்ல. பகிரங்கமாக இப்போது சொல்லப்படுவதே இதில் புதிதாக இருக்கிறது. இந்தியாவின் பொது மனநிலை முற்றிலுமாக மாறியிருக்கிறது. மோடியின் பாசாங்குத்தனங்களாலும், இந்த அரசாங்கத்திற்கே உரிய தனித்த ஆணவத்தாலும் தளர்ந்து போயிருக்கின்ற மக்கள் நரேந்திர மோடியையும், நிர்வாகம் குறித்து அவரிடமுள்ள சுயநல அணுகுமுறையையும் வெளிப்படையாகத் தாக்குகின்ற தைரியத்தை இப்போது கண்டறிந்துள்ளனர். இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் அதிக எண்ணிக்கையிலான கொரோனா நோயாளிகளை உருவாக்கி உலக சாதனையை இந்தியா படைத்திருந்த நாளில், தன்னுடைய மன் கி பாத் வானொலி நிகழ்ச்சியில் பொம்மைகள் மற்றும் குழந்தைப் பருவத்தைப் பற்றி அவர் பேசிக் கொண்டிருந்தார். சாண் வயிற்றுக்கு உணவுக்கு வழிதேடி அலைகின்ற இந்த நாடு மோடி-ஷா-பிஷ்ட் (யோகி ஆதித்யநாத்) ராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்பதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

தன்னுடைய பிம்பம் குறித்து மிகுந்த கவனத்துடன் இருந்து வருகின்ற இந்தியப் பிரதமர் மோடி தன்னைக் குறித்து ஏற்கனவே இருந்து வந்த மதிப்பீடுகளை இந்த உலகம் திருத்தியமைத்துக் கொண்ட விதம் குறித்து நிச்சயம் இப்போது வருத்தத்தில் இருக்கிறார். ஆனாலும் நாட்டின் அனைத்து பிரச்சனைகளையும் தான் கொண்டு வந்த சரக்கு மற்றும் சேவை வ ரி (ஜிஎஸ்டி) தீர்த்து வைத்து விட்டதாக அவர் கூறியதை யாரால் மறக்க முடியும்? 'மகத்தான தோல்வியடைந்த கொள்கை' என்று ஜிஎஸ்டியை விவரித்த பொருளாதார வல்லுநர்கள் `அது மோடியால் கொண்டு வரப்பட்ட மிகவும் மோசமான பணமதிப்பு நீக்க நடவடிக்கையை மீண்டும் நினைவூட்டுவதாகவே இருந்தது` என்கின்றனர். தற்போது உருவாகியிருக்கும் நெருக்கடி குறித்து மோடி ஆற்றியிருக்கும் எதிர்வினையும் கொள்கையளவிலான மிகப் பெரும் தோல்வியாகவே அமைந்திருக்கிறது. மோடிக்குப் பிடித்தமான சென்ட்ரல் விஸ்டா (ரூ.20,000 கோடி மொத்த மதிப்பீட்டில்) என அழைக்கப்படுகின்ற திட்டத்தின்கீழ் மூன்று அரசு செயலகக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான புதிய திட்டங்களை ஆரம்பித்து வைப்பதே கோவிட்டிற்கு எதிரான அவரது எதிர்வினையில் முக்கியமானதாக இருந்திருக்கிறது. உலகிலேயே மிக உயரமான சிலை, மிகப்பெரிய ஸ்டேடியம், மிகப்பெரிய சென்ட்ரல் விஸ்டா ஆகியவற்றிற்காகச் செலவழிக்கப்படும் பணத்தைக் கொண்டு எத்தனை மருத்துவமனைகள், ஆக்சிஜன் ஆலைகள், தடுப்பூசி உற்பத்தி ஆலைகளைக் கட்டியிருக்க முடியும் என்று மக்கள் கேட்பது பிரதமர் முதற்கொண்டு எந்த அமைச்ச ரின் காதுகளிலும் விழவில்லை.

இந்திய அரசாங்கம் இந்த கோவிட் நெருக்கடியை தவறாகக் கையாண்டிருப்பது உலகளவில் கவனிக்கப்பட்டுள்ளது. 'மிகவும் ஆபத்தான, வேகமான இரண்டாவது அலை இந்திய சுகாதாரப் பாதுகாப்பு அமைப்புகளை சரிவின் விளிம்பிற்கு கொண்டு சென்றிருக்கிறது' என்று வாஷிங்டனில் உள்ள நோய் இயக்கவியல் மையத்தின் இயக்குனர் கூறியுள்ளார். அவர் 'இந்தியாவின் மெத்தனம் மற்றும் அரசாங்கத்திடம் தயாரிப்பு வேலைகள் இல்லாதிருந்தது போன்றவற்றின் நேரடி விளைவாகவே இதற்கு முன்னெப்போதுமில்லாத இந்த நெருக்கடி நிகழ்ந்திருக்கிறது' என்கிறார்.. இப்போது இந்தியாவில் வாழ்க்கை நரகத்தில் இருப்பதைப் போன்று இருப்பதாகக் கூறிய தி கார்டியன் பத்திரிகை 'பெரும் துயரத்தை ஏற்படுத்தியிருக்கும் தன்னுடைய தவறுகளுக்கான திருத்தங்களை மோடி மேற்கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளது.

‘ஆணவம், அதிநவீனவாதம், அதிகாரத்துவ செயல்திறனின்மை ஆகியவை இணைந்து மிகப் பெரிய அளவில் இந்த நெருக்கடியை உருவாக்கியுள்ளன’ என்று ஆஸ்திரேலிய செய்தித்தாள் கூறியிருந்தது. ரேடியோ பிரான்ஸ் மிகவும் வெளிப்படையாக ‘சுகாதாரம் இந்தியாவில் முழுமையாகச் சரிந்துள்ளது. அதற்கான முக்கிய குற்றவாளி நரேந்திர மோடி’ என்று கூறியது. கோவிட்டுடன் போராடுவதில் மற்ற நாடுகளை விட இந்தியா மிகச் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறது என்று கூறும் அளவிற்கு மோடி தடித்த தோலுடன் இருந்தார். உண்மையில் அதிகாரப்பூர்வ அலட்சியத்தின் நேரடி விளைவாகவே இந்தியா மிகவும் பின்தங்கியுள்ளது.

இந்த வைரஸின் வீரியத்தன்மை அறிவியலாளர்களையும், வைரஸ் நிபுணர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ள போதிலும் உண்மையில் இவ்வாறு நடக்கும் என்பது ஏற்கனவே கணிக்கப்பட்டிருந்தது. தனது உரையில் மோடி பெருமை பேசியிருந்த கோவிட்-19 சார்ந்த உள்கட்டமைப்பு, வைரஸுக்கு எதிரான ‘மக்கள் இயக்கம்’ ஆகியவை இப்போது எங்கே போய் விட்டன? நோயாளிகளுக்கு மருத்துவமனையில் படுக்கைகள் கிடைக்கவில்லை. மருத்துவர்களும், மருத்துவமனை ஊழியர்களும் கையறு நிலையிலே உள்ளனர். மருத்துவமனை ஊழியர்கள் இல்லாத வார்டுகள், உயிருடன் இருக்கின்ற நோயாளிகளை விட இறந்து போன நோயாளிகள் மருத்துவமனைகளில் அதிகம் இருக்கின்ற செய்திகளை நண்பர்கள் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். மக்கள் மருத்துவமனையின் தாழ்வாரங்களில், சாலைகளில், வீடுகளில் இறந்து கொண்டிருக்கிறார்கள். டெல்லியில் உள்ள தகன மைதானங்களில் விறகு தீர்ந்து விட்டது. நகரில் உள்ள மரங்களை வெட்டுவதற்கான சிறப்பு அனுமதியை வனத்துறை வழங்க வேண்டியிருக்கிறது. அவநம்பிக்கையுடன் இருக்கின்ற மக்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய சிறிய அளவிலான உதவியையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தகன மைதானங்களாக



பூங்காக்கள், கார் நிறுத்துமிடங்கள் மாற்றப் படுகின்றன. நமது வானில் நிறுத்தப்பட்டிருக்கும் கண்ணுக்குத் தெரியாத பறக்கும் தட்டு நமது நுரையீரலில் இருந்து காற்றை உறிஞ்சுவதைப் போலத் தோன்றுகின்றது. அது நாம் இதுவரையிலும் அறிந்திராத ஒரு வகையான வான்வழித் தாக்குதலைப் போலவே இருக்கின்றது.

## ஏழை, சாமானியர் - தடுப்பூசி போடுவதிலும் வர்க்கப் பிளவு!

ஒரு பெண் தனது சகோதரருக்கு ஆக்சிஜனைத் தேடி தில்லியில் ஒவ்வொரு இடமாகச் சென்று கொண்டிருந்தார். யாரும் அவருக்கு உதவ முன்வரவில்லை, அவரது சகோதரர் இறந்து போனார். ‘மோடியா, தில்லி அரசா? யார் இதற்குப் பதில் சொல்வது? இந்த மோடி. . . எதற்காக என்னுடைய வாக்கைப் பெற்றார்? இந்த நாட்டை அவர் ஏன் இவ்வாறு அழித்துக் கொண்டிருக்கிறார்?’ என்று கேமராக்களுக்கு முன்பாக உதவியற்று பெருங்குரல் எழுப்பிக் கொண்டிருந்தார்.

தில்லி அரசு நடத்தி வருகின்ற அந்த மருத்துவமனைக்கு வெளியே ஐம்பது வயதான அன்றாடக் கூலியான பிரேம்நாத், அவரது மனைவி ஆஷா தேவி (48) ஆகியோர் மேற்கு தில்லி துவாரகாவில் உள்ள தங்கள் வீட்டிற்குத் திரும்புவதற்கு பேருந்திற்காக காத்து நின்றனர். கொரோனா வைரஸ் தடுப்பூசியை இலவசமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய மையம் அந்த மருத்துவமனையில் இயங்கி வருவது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. வீட்டு வேலைகளைச் செய்து வருகின்ற தனது

மனைவி தேவியின் தாடையில் ஏற்பட்டிருந்த வலிக்குச் சிகிச்சை பெறுவதற்காக அந்த மருத்துவமனைக்கு வந்திருந்த அந்த பிரேம்நாத் என்ற நீரிழிவு நோயாளி 'நாடு முழுவதும் தடுப்பூசி போடப்பட்டு வருவதை நாங்கள் அறிவோம் என்றாலும் அதை எவ்வாறு பெறுவது என்று எங்களுக்குத் தெரியாது' என்று கூறினார்.

இரண்டாம் கட்ட தடுப்பூசி நடைமுறைக்கு வந்து பத்து நாட்களுக்குப் பிறகு அதில் தனித்தொரு போக்கு இருப்பதை தில்லியில் உள்ள மருத்துவர்கள், சுகாதார ஊழியர்களால் கவனிக்க முடிந்திருக்கிறது. லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் மருத்துவமனையில் தடுப்பூசி மையத்தை நிர்வகித்து வருகின்ற கதிரியக்கவியல் துறையில் பணியாற்றுகின்ற மருத்துவர் ஒருவர் 'பெரும்பாலும் தடுப்பூசி போட்டுக் கொள்பவர்கள் படித்தவர்களாகவே இருக்கின்றனர், அவர்களைத் தவிர மற்றவர்கள் மருத்துவமனை ஊழியர்களாக இருக்கிறார்கள். ஏழைகள் யாரும் வரவில்லை. இது குறித்து அவர்களுக்கு இன்னும் தெரிய வரவில்லை' என்றார்.

மத்திய அரசால் தலைநகரில் நடத்தப்பட்டு வருகின்ற ராம் மனோகர் லோஹியா மருத்துவ மனையில் வெறுமனே ஆளில்லாமல் இருக் கின்ற தடுப்பூசிக்கான காத்திருப்பு பகுதியில் இருக்கின்ற மருத்துவர்கள் 'தொன்னூறு சதவீதப் பயனாளிகள் நடுத்தர வர்க்கம் அல்லது உயர் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள்' என்று கூறுகின்றனர். 'தடுப்பூசி போட்டுக் கொள்ள வருகின்ற பலரும் இந்தப் பகுதியைச் சுற்றிலும் வசித்து வருகின்ற உயர்பதவிகளில் இருப்பவர்கள்,





தொழில்நுட்ப வசதி கொண்டவர்களாகவே இருக்கின்றனர்' என்று தன்னை அடையாளப் படுத்திக் கொள்ள விரும்பாத மருத்துவர் ஒருவர் கூறினார்.

இந்த வர்க்கப் பிளவு தில்லியில் மட்டுமே இருப்பதாக இருக்கவில்லை. மும்பையில் நகராட்சி நடத்தி வருகின்ற மருத்துவமனை களில் தலைமைப் பொறுப்பில் இருக்கின்ற மருத்துவர்கள், முதன்முறையாக அந்த மருத்துவ மனைகளுக்கு வருகை தந்துள்ள, 'உயரடுக்கு' மக்கள் மட்டுமே அங்கே தடுப்பூசிகளை எடுத்துக் கொள்கிறார்கள் என்று டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையிடம் சுட்டிக் காட்டி யிருக்கிறார்கள்.

இதேபோன்றதொரு சூழ்நிலை பெங்களூரி லும் இருப்பதாக செய்தித்தாள் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏழ்மையில் உள்ள, வயதில் மூத்த பெரியவர்கள் இன்னும் தடுப்பூசிகளைப் பெறவில்லை என்று அங்குள்ள மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். 'சேரிகளில் வசிக்கின்ற எங்களுடைய வழக்கமான நோயாளிகள் யாரும் தடுப்பூசி பெறுவதற்காக வந்ததை நாங்கள் இதுவரையிலும் காணவில்லை' என்று அந்த நகரில் வசித்து வருகின்ற அடையாளம் காட்டிக் கொள்ள விரும்பாத மருத்துவர் ஒருவர் தெரிவித்தார்.

கோவிட்-19 தடுப்பூசிகளில் எழுந்திருக்கின்ற இத்தகைய வர்க்கப் பிளவிற்கு பல காரணங் களைக் குறிப்பிடலாம் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். பெங்களூரில் வசித்து வருகின்ற பொது சுகாதார மருத்துவரும், ஆய்வாளருமான டாக்டர் சில்வியா கற்பகம் கூறுகையில் 'தடுப்பூசி குறித்த தகவல்கள் குறிப்பிட்ட வகுப்பினரிடம் மட்டுமே பகிரப்பட்டுள்ளன. தடுப்பூசி போடுவதில்

தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதும் மற்றொரு காரணமாக இருக்கின்றது. தடுப்பூசி போட்டுக் கொள்ளும் பயனாளிகள் அரசாங்கத்தால் கட்டமைக்கப்பட்டுள்ள கோவின் என்ற டிஜிட்டல் தளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றிருக்கிறது. 'இணையவழி பதிவு மிகப் பெரிய தடையாக இருக்கின்றது' என்கிறார் கற்பகம்.

தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதை எளிமையாக்கித் தருவதற்குப் பதிலாக, இதுபோன்று இணையவழி பதிவு ஸ்மார்ட் போன்கள் இல்லாத, இணைய வசதிகள் இல்லாத ஏழைகளை விலக்கி வைத்திடவே வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது என்று சுகாதார நிபுணர்கள் கூறுகின்றனர். தற்போது கிராமப்புற வங்காளத்தைத் தளமாகக் கொண்டு இயங்கி வருகின்ற மருத்துவரான பிரபீர் சட்டர்ஜி கூறுகிறார் 'சேரிப் பகுதிகளில் தடுப்பூசி போடப்பட வேண்டும் என்று விரும்பினால், அரசாங்கத்தால் நடத்தப்படு கின்ற மையங்களை அங்கே ஏற்படுத்தித் தர வேண்டும்'. ஆனால் தற்போது பல நகர்ப்புற குடியிருப்புகளில் அவ்வாறான உள்கட்டமைப்பு என்பது இருக்கவே இல்லை.

கோவிட்-19 தடுப்பூசிகள் மிகவும் சமமாக அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தொழிலாள வர்க்கப் பயனாளிகளை அரசாங்கம் முன்கூட்டியே தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்று சட்டர்ஜி கூறுகிறார். 'ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அளவிலான விழிப்புணர்வு இருப்பதால் நாம் அந்த சமச்சீரற்ற தன்மையை முதலில் கடக்க வேண்டும்' குறிப்பிட்ட அளவு தடுப்பூசிகள் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு பொது சுகாதார அமைப்புகள் மூலமாக ஒதுக்கப்பட வேண்டும் என்றும் அவர் பரிந்துரைக்கிறார்.

கோவிட் 19 இரண்டாவது அலை வராது என்ற அதீத நம்பிக்கை, பொதுமக்களின் உயிர் குறித்த அக்கறையின்மை, ஆக்ஸிஜன் மற்றும் தடுப்பூசி தட்டுப்பாடு, தடுப்பூசிகளை மாநிலங்களுக்கு வழங்குவதில் பாரபட்சம் என்று பலநிலைகளில் மோடியின் பொய்முகம் வெளிப்பட்டிருக்கிறது. ஒன்றிய அரசான் அலட்சியத்தால் மருத்துவமனைகளில், படுக்கை கிடைக்காமல், ஆக்சிஜன் கிடைக்காமல், மருந்துகள் கிடைக்காமல் இந்தியாவில் இறந்துள்ள இலட்சக்கணக்கான மக்களில் பெரும்பான்மையோர் ஏழைகள். அவர்கள் இறப்பிற்கு முக்கியக் காரணம் மோடி என்ற தனிமனிதனின் அலட்சியமும், ஆணவமும், அதிநவீனவாதமும்தான். இந்த உண்மை நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள எதிர்ப்பலைகள் மூலம் உணர்த்தப்பட்டு வருகின்றன. இது மோடிக்கும் அவருடைய அரசுக்கும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒன்றிய அரசின் மக்கள் விரோதச் செயல்பாடுகளை தொடர்ந்து எதிர்ப்பதன் மூலம் மட்டுமே மக்களை அடிமைகளாக பாவிக்கும் கொடுங்கோலாட்சியை நாம் குழிதோண்டி புதைக்க முடியும். இதுவே இப்போது நாம் முன்னெடுக்க வேண்டிய முக்கியப் பணியாகும். ■



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநிலச் செயலாளரும், கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவருமான சௌந்தரராஜன் அவர்களின் இல்லத் திருமணம் நடைபெற்றது.



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திண்டுக்கல் மாவட்டச் செயலாளரும், மாநில தணிக்கையாளருமான் முபாரக் அலி அவர்களின் மகன் எம்.ஷேக் அப்துல்லா - ஏ.சித்தி அலியா ஆகியோரின் திருமணம் கடந்த 21.5.2021 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்றது.

# கொரோனாவும் மத்திய அரசின் அணுகுமுறை

## மற்றும்

# சட்டமன்ற தேர்தலில் ஆட்சி மாற்றத்திற்கு வழி வகுத்த அரசு ஊழியர்களும் மகத்தான மக்கள் தீர்ப்பும்

**நா**டு முழுவதும் கொரோனா தொற்றின் இரண்டாவது அலையால் மக்கள் கொத்துக் கொத்தாக மடிந்து வருகிறார்கள். குறிப்பாக மத்திய பிஜேபி ஆளும் உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், அரியானா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலும் தலைநகர் டில்லியில் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது.

உத்தரப்பிரதேச மாநிலம் மொராதாபாத்தில் ஒரு தனியார் மருத்துவமனையில் ஆக்சிஜன் பற்றாக்குறையால் இரு குடும்பங்களை சேர்ந்த 14 பேர் உயிரிழந்தனர். ஆனால் இந்த செய்தி வெளியிடக் கூடாது என்று மருத்துவமனை யினரை பிஜேபி அரசு மிரட்டுகிறது. அதையும் மீறி செய்தி வெளிவந்தவுடன் உயிரிழந்த அனைவரும் ஏற்கனவே பல நோய்களால் பாதிக்கப்பட்டிருந்ததாக மாநில அரசு கூறுகிறது. தலைநகர் டில்லியில் கங்காராம் மருத்துவமனை யில் 25க்கும் மேற்பட்ட நோயாளிகள் ஆக்சிஜன் இல்லாமல் உயிரிழந்தனர். தில்லி, வாரணாசி, லக்னோ, அலகாபாத், போபால், இந்தூர் ஆகிய நகரங்களில் 24 மணி நேரமும் மயானங்களில் சடலங்கள் எரியூட்டப்பட்டு வருகின்றன. எத்தனை சடலங்கள் எரியூட்டப்பட்டன என்ற தகவலை அரசு தெரிவிக்க மறுக்கிறது. இதனால் நாடு முழுவதும் உள்ள மிக மோசமான நிலையைச் சுட்டிக்காட்டி மத்திய அரசுக்கு எதிராக முகநூலில் கடுமையாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. "தற்போதைய நெருக்கடிக்கு சரியான பதில் பிரதமர் ராஜினாமா செய்வது தான்" என்பன உள்ளிட்ட கருத்துக்கள் முகநூலில் பதிவிடப்பட்டு உலகம் முழுவதும் டிரெண்ட் ஆனது. இதனால் ஆத்திரமடைந்த மத்திய அரசு முகநூல் நிறுவனத்திற்கு நிர்ப்பந்தம் அளித்து அத்தகைய விமர்சனங்களை "பிரதமர் ராஜினாமா செய்" என்ற ஹேஷ்டேக்கையும் நீக்க வைத்தது. இதற்கு உலகம் முழுவதும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

மத்திய (பிஜேபி) அரசு கொரோனா தொற்று பரவலை எதிர்கொள்வதில் தோற்றுவிட்டதாக உள்ளூர் முதல் சர்வதேச ஊடகங்கள் வரை கடுமையாக விமர்சனம் செய்கிறது. அதில் ஒரு சில விபரங்கள் பத்திரிகையில் வெளிவந்தது, தோழர்கள் தெரிந்து கொள்வதற்காக.

அமெரிக்கா நியூயார்க் டைம்ஸ் ஏடு தொற்று நோய்க்கு எதிராக முன்கூட்டியே பிரதமர் வெற்றியை அறிவித்துவிட்டார். இதனால் இரண்டாவது அலைபற்றி அவரிடம் எந்த முன் யோசனையும் திட்டமும் இல்லை என குற்றம் சாட்டியுள்ளது.

இந்திய அரசு நிர்வாகம் சீரழிந்துவிட்டது. நரகத்தில் இந்தியர்கள் வாழ்கிறார்கள் என்று இங்கிலாந்து நாட்டு தி கார்டியன் பத்திரிக்கை விமர்சித்துள்ளது.

இதேபோல் டெல்லி மெயில் லே மோன்டே எனும் பிரேசில் நாட்டில் ஒ குளோபோ, ஜப்பான் ஜப்பான் நாட்டின் ஜப்பான் டைம்ஸ், ஆஸ்திரேலியாவின் சிட்னி மார்னிங் ஹெரால்ட் பத்திரிகை, சவுதியின் கல்ப் டைம்ஸ் போன்ற சர்வதேச ஊடகங்கள் பலவும் மத்திய அரசின் (மோடி) நிர்வாகத் திறமையின்மை கடுமையாக விமர்சித்துள்ளது.

கடைசியாக தி லான்செட் (The Lancet) என்ற மருத்துவ நாளிதழும் இந்தியாவில் கொரோனா உயிரிழப்புகள் அதிகரித்ததற்கு மத்திய அரசு பொறுப்பேற்க வேண்டும் என குற்றம்சாட்டியுள்ளது.

ஆனால் இவை அனைத்தையும் மறைத்து விட்டு பிரதமர் மோடி அவர்களின் செயல் பாடுகளை உலக நாடுகள் பாராட்டுவ தாக டில்லி கார்டியன் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்ட



தாக கூறி பிஜேபினர் சமூக வலைதளங்களில் பரப்பினார்கள். ஆனால் இது தொடர்பாக உண்மையை கண்டறியும் முயற்சியில் பிஜேபினரின் பொய் பிரச்சாரம் என்பது தெரிய வருகின்றது.

தி கார்டியன் பத்திரிகை லண்டனிலிருந்து வெளியாகக் கூடியது. ஆனால் இந்த டெல்லி கார்டியன் பத்திரிக்கை எங்கிருந்து வெளியாகிறது என்று இணையதளத்தில் ஆய்வு செய்தபோது பிஜேபி ஆளும் உத்தரபிரதேசத்தில் இருப்பதாக காட்டியுள்ளது.

அதுமட்டும் அல்ல இது போலவே வேறு சில வெளிநாட்டு பத்திரிகையின் பெயரில் இணையதள முகவரி பிஜேபி அரசுக்கு முட்டுக் கொடுத்து வருவது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இவ்வாறு கொரோனா விவகாரத்தை தவறாகக் கையாண்டு வருவதால் நடுத்தர வர்க்கத்தினரிடம் மோடியின் செல்வாக்கு 13% அளவு சரிந்துள்ளது என அமெரிக்க நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்திய பிரதமர் மோடி அவர்கள் குளோபல் லீடர்ஸ் பட்டியலில் உள்ள நிலையில் அவரது செல்வாக்கு அமெரிக்காவை சார்ந்த "மார்னிங் கன்சல்ட்" என்ற நிறுவனம் ஆய்வு வெளியிட்டுள்ளது.

அதில் ஆகஸ்ட் 2019 முதல் ஜனவரி 2021 வரை நடுத்தர வர்க்கத்தினரிடம் பிரதமர் மோடியின் செல்வாக்கு 80%லிருந்து ஜனவரி 2021 67% குறைந்துள்ளது. இதற்கு காரணம் கொரோனா நெருக்கடியை சரியாக எதிர்கொள்ளாததுதான் என்று குறிப்பிட்டுள்ளது.

2006 முதல் 2016 வரை கணக்கெடுப்பின்படி வறுமை கோட்டுக்கு கீழிருந்த 27 கோடியே 30 லட்சம் மக்கள் நடுத்தர வர்க்கத்தில் சேர்ந்துள்ளனர். இதனால் நடுத்தர வர்க்கத்தினரின் மக்கள் தொகை 60 கோடியாக உள்ளது. இதில் அரசு ஊழியர்கள், மருத்துவர், தொழில்நுட்ப ஊழியர் உள்ளிட்டோர் இருக்கின்றனர்.

கொரோனா தொற்று பாதிப்பில் சுமார் 60 கோடி பேர்கள் நடுத்தர வர்க்கத்தினர் பாதிக்கப்பட்டுள்ளதால் பிரதமர் மோடி எதிராக நிலைபாட்டை எடுத்துள்ளனர் என்று மார்னிங் கன்சல்ட் தெரிவித்துள்ளது.

இதுவரை நடுத்தர வர்க்கத்தின் பிரதமர் மோடி அவர்களை ஆதரித்து வந்தனர். தற்போது மத்திய அரசுக்கு எதிரான நிலைபாட்டை எடுத்துள்ளதால் வருகின்ற 2022 உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் நடைபெறும் சட்டமன்ற தேர்தலில் பின்னடைவை ஏற்படுத்தும் என அமெரிக்க பத்திரிக்கை மார்னிங் கன்சல்ட் தெரிவிக்கிறது.

## ஏப்ரல் 2021ல் வேலையின்மை ஒரு மாதத்தில் 25 லட்சம் பேர் வேலைகள் இழப்பு

கொரோனா இரண்டாவது அலை வேகம் எடுத்த நிலையில் இந்தியாவில் நாளொன்றுக்கு 4 லட்சம் கொரோனாவில் பாதிக்கப்பட்டு 3 ஆயிரம் உயிரிழப்பும் பெரும் துயரமாக மாறியுள்ளது.

மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. படுக்கை வசதி, தடுப்பூசி, மருந்து, ஆக்சிஜன் சிலிண்டர் தட்டுப்பாடு, மயானங்களிலும் எரிக்க முடியாத அளவு பிணங்கள் எண்ணிக்கை அதிகரித்து கொண்டு இருக்கிறது. இதனால் பல மாநிலங்களில் முழு முடக்கம் அளவிற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

தொழில் வர்த்தகத்தில் லட்சக்கணக்கான வேலை இழப்புகள் பல்வேறு மாநிலங்களில் பணியாற்றிய வெளிமாநில தொழிலாளர்கள் கூட்டம் கூட்டமாக தங்களின் சொந்த ஊருக்கு திரும்ப ஆரம்பித்துள்ளனர்.

இந்தியாவில் டிசம்பர் மாதத்தில் வேலையின்மை விகிதம் 3 மாதங்களாக இருந்தது 6% இருந்தது. இந்நிலை மார்ச் 2021ல் 6.5% ஏப்ரல் மாதத்தில் வேகமாக 7.97% உயர்ந்துள்ளது. இந்திய பொருளாதார கண்காணிப்பகம் தனது ஆய்வறிக்கையில் கூறியுள்ளது.

இந்த வேலையின்மை கடந்த மாதத்தில் இல்லாத உயர்வு என்றும், நாடு முழுவதும் 75 லட்சம் வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது. இதில் நகர்ப்புறங்களில் 9.78 சதமும் கிராமப்புறங்களில் 7.13 சதமும் உள்ளது. இதுவே நாட்டை வேலையின்மையை நோக்கி தள்ளி இருக்கிறது. நாட்டில் புதிய பணியமர்த்தல் ஏப்ரல் மாதத்தில் 15% குறைந்துள்ளது. வேலைவாய்ப்பு இணைய தளமான naukri.com தெரிவிக்கிறது.

ஐ.டி. மென்பொருள் துறை வேலை அளிப்ப தில் கடந்த சில மாதங்களாக வளர்ச்சிப் பாதையில் இருந்தது. ஏப்ரலில் மென்பொருள் துறையிலும் வேலைவாய்ப்பு 12% சரிவை சந்தித்துள்ளது.

நுகர்வோர் பொருட்கள் தொலைத் தொடர்புத் துறையில் வேலையளிப்பு 15% வீழ்ச்சி.

அதேபோல் சில்லறை விற்பனையில் 33% வேலையளிப்பு வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதேபோல் ஏப்ரல் மாதத்தில் பணியமர்த்துதல் நடவடிக்கையில் விருந்தோம்பல், சுற்றுலாத் துறை 36%, வங்கி மற்றும் நீதித்துறை 26%, கல்வி 24%, ரியல் எஸ்டேட் துறை 33% மிக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் தாக்கம் நாட்டின் முக்கிய நகரங்களில் பணியமர்த்தல் நடவடிக்கை மும்பை 20%, டில்லி 18%, பெங்களூரு மற்றும் சென்னை தலா 10%, ஹைதராபாத் 4%, உடல்நல ஆயுள் காப்பீட்டிற்கான அளவுகள் 5%, பார்மா மற்றும் பயோடெக் 9%, மருத்துவம் மற்றும் சுகாதார துறை 10% என பணியமர்த்தலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் வேலைச் சந்தையில் தற்போதைய தாக்கம் நாம் கண்டது மிகக் கடுமையாக இருக்கும் என்று naukari.comஇன் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

## நோயாளிகளை அரசு விடுவதும் இனப்படுகொலைதான் - உயர்நீதிமன்றம் கேள்வி

ஆக்ஸிஜன் இல்லை என்ற காரணத்திற்காக நோயாளிகளை சாக விடுவது கிரிமினல் குற்றம் என்று உத்தர பிரதேச பிஜேபி அரசை அலகாபாத் உயர் நீதிமன்றம் மிகக்கடுமையாக சாடியுள்ளது. மேலும் இது ஒரு இனப்படுகொலை என கூறியுள்ளது.

பிஜேபி ஆட்சி நடக்கும் உத்தரப்பிரதேசத்தில் மொத்தம் 13 லட்சத்து 13 ஆயிரத்து 361 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோர், இதுவரை 13 ஆயிரத்து 162 பேர் இறந்துள்ளனர். போதிய மருத்துவ வசதி, படுக்கை வசதி, ஆக்சிஜன் கிடைக்காததே இவர்களின் மரணத்திற்கு காரணம் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அண்மையில் மீரட் மருத்துவக் கல்லூரி ஐசியுவில் 5 நோயாளி மரணம், லக்னோ, கோமதி நகர் கண் மருத்துவமனை மற்றும் பிற தனியார் மருத்துவமனைகளில் ஆக்சிஜன் விநியோகம் இல்லாததால் கொரோனா நோயாளி புறக்கணிக்கும் போக்கு, சமூக ஊடகங்களில் வெளியாகி வழக்கு உயர்நீதிமன்றத்திற்கு சென்றது. உயர்நீதிமன்றம் நோயாளிகளை சாக விடுவது கிரிமினல் குற்றம் என்று நீதிபதி சித்தார்த் வர்மா அஜித்குமார் கடுமையாக விமர்சித்துள்ளது. மேலும் கூறியது கொரோனா நோயாளிகள் மரணத்தை நாங்கள் துயரத்துடன் பார்க்கிறோம். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள்தான் பொறுப்பேற்க வேண்டும்.

## மத்திய அரசின் உச்சகட்ட அலட்சியம்

இந்தியாவில் தடுப்பூசி தயாரிப்பில் முன்னோடியான விஞ்ஞானி ஹாப்கின் 1883ஆம் ஆண்டு ஆக்ராவில் இந்தியாவில் முதல் பரிசோதனை நடத்தினார். 1896இல் பிளேக், கொள்ளை நோய் தாக்கியதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் அரசு பிளேக் தடுப்பூசி தயாரிக்க பம்பாய் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரு ஆய்வுக்கூடம் தொடங்கியது. இதுதான் இந்தியாவில் முதல் தடுப்பூசி ஆய்வகம் என்பதுடன் ஹாப்கின் 1897ஆம் ஆண்டில் இங்கு உருவான தடுப்பூசி தான் உலகில் முதல் தயாரிக்கப்பட்ட முதல் தடுப்பூசி ஆகும். இந்த தடுப்பூசி 1905, 1925 1977ஆம் ஆண்டுகளில் மூன்று முறை பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஹாப்கின் அஜந்தா பார்மாசூடிக்கல்ஸ், கக்குவான், பிளேக், போலியோ, மைலிடிஸ் மற்றும் ரேபிஸ் தடுப்பூசிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றனர்.

இது குறித்து இன்னும் பல்வேறு விவரங்கள் இருந்தாலும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ஐசிஎம்ஆர்) உலகின் பழமையான மற்றும் மிக பெரிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களில் ஒன்றாகும். தேசிய வைராலஜி நிறுவனம் இதன் உள்நிறுவனங்களில் ஒன்று 13.3.2020 அன்று இந்நிறுவனங்களின் விஞ்ஞானிகள் கொரோனா தொற்றை ஏற்படுத்தக்கூடிய வைரஸை (SARS.Voc.2) சேகரிக்கப்பட்ட மாதிரிகளிலிருந்து முதல்முறையாக பிரித்தெடுத்து பத்திரப்படுத்தினர். பெருமைபடத்தக்க இச்சோதனையின் மூலம் உலக நாடுகளின் வரிசையில் இந்தியா ஐந்தாவதாக இணைந்தது. இது தடுப்பூசிகள், மருந்துகள் மற்றும் நோயறியும் கருவிகளின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான முதல் படி என்பதால் (ஐசிஎம்ஆர்)இன் டைரக்டர் ஜெனரல் டாக்டர் பல்ராம் பாரிக்வா, இதில் நாங்கள் பெருமை கொள்கிறோம் என்றார். தடுப்பூசி தயாரிப்பதற்கான அடுத்தகட்ட அபிவிருத்திகள் தொடர்பாக (ஐசிஎம்ஆர்) தேசிய வைராலஜி நிறுவனத்தின் விஞ்ஞானிகள் பொதுத்துறை நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் விஞ்ஞானிகளை கொண்ட அவசரகால கலந்தாய்வு கூட்டத்திற்கு மத்திய பிஜேபி அரசு உடனே ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

அவ்வாறு செய்யப்படவில்லை. இந்தக் கூட்டத்தில் பொதுத்துறை நிறுவனங்களின் நுண் உயிரியல் தொழில்நுட்ப தகுதி மற்றும் விஞ்ஞானிகளின் தயார் நிலை பரிசீலனைகளை இறுதிப்படுத்தி முடிவில் முன்வரும் தனியார் பங்களிப்பையும் இணைத்துக் கொண்டு அடுத்த கட்டத்திற்கு சென்றிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெற்றதாகவோ, அதற்கு முயற்சிகள் எதுவும் இருந்ததாகவோ தகவல் இல்லை. ஆனால் தடுப்பூசி அபிவிருத்தி ஆய்வினை பாரத் பயோடெக் என்னும் தனியார் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொண்டதுடன் தடுப்பூசி உற்பத்தியை ஒட்டுமொத்தமாக பாரத் பயோடெக்கிடம் மத்திய அரசு வழங்கியது. *(15.1.2008 அன்று அப்போதைய மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த மருத்துவர் அன்புமணி ராமதாஸ் மத்திய ஆராய்ச்சிக் கழகம், பிசிஜி லேப்பேரட்டரி, குன்னூர் பாஸ்டியர், இன்ஸ்டிடியூட் ஆகிய மூன்று பொதுத்துறை நிறுவனங்களின் உற்பத்தியை நிறுத்தினார்)* அதனைத் தொடர்ந்து இந்திய தடுப்பூசியின் உற்பத்தி வரலாற்றில் மத்திய பிஜேபி அரசு இழைத்த இரண்டாவது பெரிய கொடுமையாகும்.

## பிரதமரின் மான் கி பாத்

இவ்வாறு நாடு முழுதும் பாதிப்புக்குள்ளாகி இருக்கக்கூடிய நிலையில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பொறுப்பேற்று 7 ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. அவர் பதவியேற்றபோது பத்திரிகையாளர்கள் எப்போதும் என்னை சந்திக்கலாம் என்று கூறி இருந்தார். ஆனால் பத்திரிகையாளர்களை சந்திப்பதை முற்றிலும் தவிர்த்து வந்துள்ளார். அதேபோல் நாடாளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்று விவாதங்களுக்கு பதில் அளிப்பதிலும் அவர் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் மனதின் குரல் என்ற பெயரில் யாரும் கேள்வி கேட்க, விவாதிக்க வாய்ப்பில்லாத நிகழ்ச்சிகளில் பங்கேற்று பேசி வருகிறார் என பத்திரிகைகள் கூறுகின்றனர்.

30 மே ஞாயிறன்று மனதில் குரல் 77வது நிகழ்வில் பிரதமர் மோடி அவர்கள் பேசியுள்ளார். அவரது வழக்கமான உரைகளைப் போலவே சுய பெருமிதம் உண்மையை மறைக்கின்ற வார்த்தை ஜாலங்களுமே இந்த உரையிலும் இருந்தது என்று கூறுகிறார்கள் ஊடகவியலாளர்கள்.

ஏழு ஆண்டு கால ஆட்சியில் குடிநீர், மின்சாரம், சுகாதாரம், கல்வி என அனைத்தும் கிடைத்து கோடிக்கணக்கான மக்கள் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர் என்று பேசியுள்ளார். கொரோனா நோய்த் தொற்றினால் மட்டுமல்ல தொடர்ச்சியான இந்திய மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து தொற்று பரவலால் உயிருக்கு அஞ்சி வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இந்நிலையில் அவர்கள் மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள் என்று மனதின் குரல் நிகழ்ச்சியில் பேசுவதற்கு முன் தன்னுடைய மனசாட்சியின் குரலை பாரத பிரதமர் கேட்டிருக்க வேண்டும்.

கொரோனா தொற்றின் முதலாவது அலையை தனது அரசு வெற்றிகரமாக சமாளித்தது என்று பிரதமர் அவர்கள் திரும்பத் திரும்ப கூறியுள்ளார். ஆனால் இது உண்மையல்ல. இப்படியொரு தோற்றத்தை ஏற்படுத்தி தனக்குத்தானே பாராட்டி பேசி மகிழ்ந்து தன்னுடைய சகாக்கள் மூலம் புகழாரம் சூட்டிக்கொண்டு பிரதமர் அவர்கள் இருந்த நிலையில்தான் முதலாவது அலையை மத்திய அரசு முறையாக சமாளிக்க மறுத்ததால் தான் இரண்டாவது அலை மிக மோசமாக உள்ளது என நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சர்வதேச ஊடகங்கள், மத்திய அரசின் தோல்வியை வெளிச்சம் போட்டு காட்டுகின்றன.

கொரோனா முதல் அலை முற்றாக முடிந்துவிட்டது என்று கூறி, கும்பமேளாவுக்கு பெரும் கூட்டத்தை கூட்டி தேர்தல் பிரச்சாரம் என பிரதமர் மோடி அவர்கள் முற்றிலும் பொறுப்பற்ற வகையில் நடந்து கொண்டார் என்கிறது பத்திரிகை செய்திகள். மேலும் இந்த பின்னணியில் தடுப்பூசி, ஆக்சிஜன், உயிர் காக்கும் மருந்துகள் பெருமளவு ஏற்றுமதி செய்யப்பட்டன. உள்நாட்டில் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை இல்லை. எனவே இரண்டாவது அலைக்கு இந்தியா மிகப்பெரிய விலையை கொடுக்க வேண்டியுள்ளது.

இப்போதும்கூட கொரோனா தொற்றை சமாளிக்கும் பெரும் பொறுப்பை மாநில அரசுகளிடமே மத்திய அரசே தள்ளி விடுகிறது. மாநிலங்களுக்கான தேவையான நிவாரணங்களை போதுமான அளவு தர மறுக்கிறது. இந்த லட்சணத்தில் முதல் அலையை வென்றதுபோல் இரண்டாவது அலையையும் வெல்வோம் என்று கூறுவது அடுத்த அலைகள் குறித்து அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## இந்தியாவிற்கு வழி காட்டும் கேரளம்

சமீபத்தில் நடந்துமுடிந்த 5 மாநில தேர்தலில் தமிழ்நாடு, கேரளம், மேற்குவங்கம் ஆகிய

மாநிலங்களில் மத்திய பிஜேபி மதவாத கட்சி ஆட்சிக்கு வராமல் தடுக்க வாக்களித்துள்ளார்கள்.

இந்தியாவில் முதன்முதலில் இடதுசாரிகள் (கம்யூனிஸ்ட் கட்சி) ஆட்சி ஏற்பட்ட மாநிலம் கேரளாவில் கடந்த 40 ஆண்டுகளாக ஒரு தடவை ஆட்சியில் உள்ள கட்சியோ கூட்டணியோ அடுத்துவரும் தேர்தலில் வெற்றி பெற இயலாமல் தோல்வியை தழுவுவதே வரலாறு என்றும் பத்திரிகைகள் கூறுகின்றனர். தற்போது ஆட்சி மாற்றத்தை தடுத்து மீண்டும் இடது ஜனநாயக முன்னணி ஆட்சியில் அமர்வதன் மூலம் வரலாற்று சாதனை நிகழ்ந்து உள்ளது. இந்த ஆட்சி மாற்றம் எளிதாக ஏற்பட்டதல்ல. மத்திய அரசின் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில், இடது முன்னணி அரசு அமைந்துள்ளது.

ஆட்சிக்கு வந்த முதல் ஆண்டிலேயே கேரள மாநிலம் ஒக்கி புயலால் பெரும் பேரழிவை சந்தித்தது. அப்போது இடது முன்னணி அரசு மக்களை காக்க களத்தில் இறங்கி எல்லா முயற்சிகளையும் அடுத்தது. முகாம்கள் அமைப்பது, தங்க வைத்து அனைத்து நிவாரண உதவிகள், சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தி உரிய நிவாரணம் வழங்கியது, கேரள முதல்வர் பினராயி விஜயன் அரசு கடலில் சிக்கிக்கொண்ட மீனவர்களை தேடி கண்டுபிடித்து கரை சேர்த்த. கேரள மீனவர்களை காப்பாற்றும் நேரத்தில் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களையும் கேரள அரசு காப்பாற்றி உணவு வழங்கி உரிய சிகிச்சையும் அளித்து உயிர் காத்தது.

இரு பெரு வெள்ள பாதிப்புகளால் கேரளம் பாதிக்கப்பட்டபோது அனைத்து நிவாரண உதவிகளையும் செய்தது. மத்திய அரசு, மாநில அரசு கேட்ட நிதி உதவியை மறுத்ததோடு, துயர் துடைக்க ஐக்கிய அரபு அமீரகம் அளிக்க முன்வந்த உதவியும் வாங்க தடை விதித்தது. கேரள அரசு அந்த சவாலையும் எதிர்கொண்டு மக்களை பாதுகாத்தது.

2016ல் கேரள மாநிலத்தின் ஒரு சில மாவட்டங் களில் நிபா வைரஸ் கடுமையாக பாதித்தது. உடனடியாக கேரள அரசு மக்களை காக்க களத்தில் இறங்கி, பிற பகுதிகளுக்கு பரவாமல் தடுக்க சுகாதாரத்துறை அமைச்சர் சைலஜா டீச்சர் போர்க்கால நடவடிக்கை மருத்துவத்துறையுடன் இணைந்து செயல்பட்டார். கடுமையான சவாலைச் சாமர்த்தியமாகவும் மனிதாபிமானத் தோடும் கையாண்டதை உலகமே பார்த்து வியந்தது. மிக பலவீனமான பொருளாதாரத்தை யும் குறைவாக அதிகாரத்தையும் கொண்ட கேரள இடது முன்னணி அரசு மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கு பெற்றது.

கோவிட் 19 பெருந்தொற்று இந்தியாவில் முதன்முதலாக தாக்கியது கேரள மாநிலத்தைத் தான். முதன்முதலில் வூஹானிலிருந்து வந்த கேரள மாணவர்களிடம் அந்நோய் தென்பட்டது. உடனே சுதாரித்துக் கொண்ட கேரள அரசு நிபா வைரஸின்போது கையாண்ட அனுபவம் இருந்ததால் சுகாதாரத்துறை அமைச்சர் சைலஜா டீச்சர் போர்க்கால அடிப்படையில் நேரடியாக களத்தில் இறங்கினார்.

பிரதமர் மோடி அவர்கள் அறிவிக்கப்பட்ட முழு ஊரடங்கு செய்வதறியாது திகைத்து நின்ற போது தினசரி வாழ்க்கை தொடர உணவுத் தொகுப்பு வழங்கி நாட்டுக்கே முன்னுதாரணமாக திகழ்ந்தது. அன்றாட கூலிகள், சமூக சமையற் கூடங்கள், தினசரி உணவு பொட்டலங்கள் வழங்கியது. புலம்பெயர் தொழிலாளி எங்கள் விருந்தாளிகள் என முதல்வர் அவர்கள் சொன்னது தரமான கொரோனா சிகிச்சை உத்திரவாதப் படுத்தியது. தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சை கொரோனா மரணம் நாட்டிலேயே மிகவும் குறைவான மாநிலம் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டது. உலக சுகாதார நிறுவனத்தாலும்கூட பாராட்டப்படும் நிலையை கேரள அரசு உருவாக்கியது.

முதல் அலை கோவிட் 19 பாதித்தபோதே 2வதுஅலையின் சாத்தியக் கூறுகளை கண்டறிந்து கேரள அரசு அதை எதிர்கொள்வதற்கு அனைத்துவிதமான மருந்து கட்டமைப்பு உருவாக்க துவங்கியது. தினசரி பத்திரிகையாளர் சந்திப்பு முதல்வர் நடத்தினார். 18 வயது முதல் 45 வயது வரையிலான இளைஞர்களுக்கு மாநில அரசு இலவசமாக தடுப்பூசி போடும் என முதன்முதலாக அறிவித்தார் முதல்வர் பினராயி விஜயன் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய ஆட்சியாளர்கள் எதிர்கட்சிகளும் சேர்ந்து தங்க கடத்தல், ஐயப்பன் கோவில் விவகாரம் அத்தனை வதந்திகளையும் முறியடித்து அது மட்டுமல்ல கார்ப்பரேட் பொருளாதார கொள்கைகளுக்கு எதிரான மாற்றுக் கொள்கையை முன்வைத்து மக்கள் நலனை முன்வைத்து செயல்பட்டது.

கொரோனா பாதிப்பின் போது மக்களுக்கு நிதி வழங்கியது காய்கறிகள், உட்பட உணவுப் பொருட்களை வீடு தேடி கொண்டு போய்

சேர்த்தது கேரளத்தையே புரட்டிப்போட்ட மழை வெள்ளம் அந்த பாதிப்பின்போது மக்களோடு மக்களாக இணைந்து செயல்பட்டது போன்ற நடவடிக்கைகளால் அந்த அரசை உலக நாடுகள் பாராட்டின. இந்த நடவடிக்கைகள் அனைத்தை யும் தான் செய்ததாக முதல்வர் தம்பட்டம் அடிக்கவில்லை. மக்கள் சாதித்தார்கள் என மக்களை உயர்த்திப் பேசியது போன்ற அணுகு முறைகள் அரசின் மீது அரசு ஊழியர்களுக்கும் மக்களுக்கும் பெரிய நம்பிக்கை வைத்தது இடதுசாரி ஆட்சியை கொடுத்துள்ளார்கள்.

## தமிழகம்

தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மகத்தான வெற்றி பெற்றுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்று தமிழக முதல்வராக மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளாக அதிமுக ஆட்சியின் மீதான அதிருப்தி மத்திய ஆட்சியிடம் தமிழகத்தின் உரிமை தொடர்ந்து காவு கொடுத்துவந்தது போன்றவை தமிழகத்தில் ஆட்சி மாற்றம் அவசியம் வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. அதுபோல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போராட்டங்களை காவல்துறை கொண்டு ஒடுக்குவது, அவர்களை இழிவுபடுத்தும் வகையில் பேசியும் செய்திகள் வெளியிட்டு வந்தது பெரிய சாதனையாக கருதியது. அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகளை பேசி தீர்க்காமல் போராட்டம் நடத்தினால் சம்பள பிடித்தம் அவர்கள் மீது குற்ற குறிப்பாணை, பணி மாறுதல் பழி வாங்கும் நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொண்டிருந்த கோரிக்கைகளை, பறிக்கப்பட்ட அதிமுக தேர்தல் கால வாக்குறுதியில் கூறிய புதிய பென்சன் உட்பட ரத்து செய்யாமல் கடந்த 10 ஆண்டுகளில் எண்ணற்ற அரசு ஊழியர் சங்கமும், ஜாக்டோ-ஜியோ இணைந்து வேலைநிறுத்தம் உள்ளிட்ட போராட்டங்களை நடத்தியும் ஒருமுறை கூட அழைத்துப்பேசி எங்களின் கோரிக்கைகளை தீர்க்கப்படவில்லை.

அது மட்டுமல்ல தமிழகத்தில் மக்கள் பிரச்சனைகளுக்காக குரல் கொடுத்து வந்த அனைத்து அரசியல் கட்சிகளும் ஜனநாயக பூர்வமான போராட்டத்தை நடத்தினால் அதை கண்டுகொள்ளவில்லை. அதனால் அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டதும் இந்த அணிதான் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

தமிழக சட்டசபை தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி பல சவால்களை சந்தித்து 159 இடங்களில் வெற்றி பெற்று 45% வாக்குகள் பெற்றுள்ளது. 2019 நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட இத்தேர்தலில் அதிமுக குறைவான வாக்கு பெற்றுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் மத்திய பிஜேபி அரசால் நிறைவேற்றப்பட்ட அனைத்து சட்டங்களையும் ஆட்சேபனை ஏதுமின்றி அதிமுக ஆதரித்தது. குறிப்பாக தொழிலாளர் நலச் சட்டங்கள், சிறுபான்மை மக்களுக்கு எதிரான முத்தலாக் சட்டம், குடியுரிமை திருத்த சட்டத்தை ஆதரித்ததோடு குடியுரிமை சட்டத்தால் யாருக்கும் பாதிப்பு வராது என முதலமைச்சர் தமிழகத்தில் வாதாடினார்.

ஒட்டுமொத்த விவசாயத்தையும் வேளாண் வணிகத்தை கார்ப்பரேட்டுகளுக்கு ஒப்படைக்கும் வேளாண் சட்டங்களையும், பொது விநியோகத்தை ஒழித்துக்கட்ட அத்தியாவசிய சட்டத்தை திருத்துவதற்கும் அதிமுக அரசு தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி இந்த சட்டத்தால் விவசாயிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை என அதிமுக அமைச்சர்களும் தலைவர்களும் பிரச்சாரம் செய்தார்கள். இதனால் ஒட்டுமொத்த விவசாயிகளுக்கு அதிமுக துரோகம் இழைத்தது. காஷ்மீர் மக்களின் உரிமை தொழிலாளர்கள் போராடி பெற்ற உரிமைகள் பறிக்கும் சட்டத்திருத்தங்கள் தேசிய கல்விக்கொள்கை அமலாக்கத்தின் மூலம் கல்வி உரிமை ஒட்டுமொத்த மத்திய அரசு பறித்துக்கொண்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் நீட் தேர்வை கொண்டு வந்து 13க்கும் மேற்பட்ட குழந்தைகள் மரணத்திற்கு காரணமாக இருந்தது. உணவு பாதுகாப்பு சட்டத்தை கொண்டு வந்தது, உதய்மின் திட்டத்தை ஆதரித்தது போன்ற நடவடிக்கைகள் ஜிஎஸ்டி வரி விதிப்பில் தமிழகத்தின் பங்கு கேட்டு பெறாதது, தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு, சாத்தான்குளம் தந்தை மகன்

அடித்துக் கொல்லப்பட்டது காவல் துறையால், எட்டுவழிச் சாலை ஏழை விவசாயி நிலங்கள் கைப்பற்றியது அதை எதிர்த்தவர்களை அடக்குமுறை ஏவியது.

கொடுமையான கொரோனா நோய் தொற்றுக்கு இந்திய நாட்டு மக்களைப் போல் தமிழக மக்கள் கடும் பாதிப்புள்ளாகினபோது நோய் தொற்றை தடுக்கவும் மருத்துவ சிகிச்சை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கிட மத்திய அரசு மறுத்துவிட்டது. அனைத்திற்கும் தமிழக அரசு கடன் வாங்கி செலவழித்தது. ஒட்டுமொத்தத்தில் மத்திய அரசு மற்றும் கடந்த அதிமுக அரசுகளின் கையாலாகாத்தனத்தினால் இன்று தமிழகம் இத்தகைய இன்னலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளது.

இன்னொரு பக்கம் அதிமுக அரசு கடந்த பத்தாண்டுகளில் தமிழகத்தின் நிதி நிர்வாகம், சட்டம் ஒழுங்கு, மனித உரிமைகள், வேலை வாய்ப்பு, தொழில் வளர்ச்சி, உள்ளாட்சி அமைப்புகள் செயல்பாடு அத்தனையும் நாசப்படுத்தி விட்டது. தமிழகத்தின் நிதிநிலை அதல பாதாளத்திற்கு சென்றுள்ளது. தமிழக அரசின் நடப்பாண்டு வருவாய் பற்றாக்குறை ரூ.65,994 கோடி என்று உச்சநிலை அடைந்துள்ளது. தமிழக அரசின் மொத்த கடன் ரூ.5,70,189 கோடியாக உயர்ந்துள்ளது. ஓராண்டுக்கு செலுத்தப்படும் வட்டி ரூ.53,000 கோடி. அனைத்தும் சேர்த்தால் 10 லட்சம் கோடி.

நாடாளுமன்ற தேர்தல் படிப்பினைகளின் அடிப்படையில் தமிழக சட்டப்பேரவையில் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு பிஜேபியோடு சேர்ந்து அதிமுக தீவிர முயற்சிகளை செய்தது. அரசு ஊழியர் ஆசிரியர் கோரிக்கைகளை அதிமுக தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்படவில்லை. அதை நிராகரித்தது. மேலும் சாதிய மற்றும் மதம் அணி சேர்க்கையை உருவாக்கி அதன்மூலம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை வெற்றியை முறியடித்து விடலாம் என்று அதிமுக எண்ணியது. இதனால் சட்டமன்றத்தில் சாதிய அடிப்படையில் இட ஒதுக்கீடு கொண்டுவந்து சமூக நியாயத்தைப் பற்றி கவலை இல்லாமல் மாறாக இவர்களது கவலை எல்லாம் இம்மக்களின் வாக்கு வங்கியை நோக்கியே இருந்துள்ளதாக பத்திரிகை செய்திகள் கூறுகிறது.

மேற்கண்டவாறு அதிமுக அரசு கடந்த பத்தாண்டுகள் மக்கள் விரோத ஊழியர் விரோத போக்கினை கடைபிடித்ததை கவனத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடர்ச்சியான இயக்கம் நடத்தியது. பொருளாதார கோரிக்கைகள் மட்டும் அல்ல மக்கள் நலத் திட்டங்களுக்காகவும் இளைஞர்களுக்கு வேலை கொடு என நாடு முழுவதும் பிரச்சார இயக்கம் நடத்தியும் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை எதிர்த்து போராட்டம் நடத்தி சில கோரிக்கைகள் வென்று இருக்கிறோம். மேலும் தலைமைச் செயலாளரை உயர்நீதிமன்றத்தில் நிறுத்தி ஊதிய மாற்றம் பெற்று இருக்கிறோம். ஆனாலும் இந்த அதிமுக அரசு போராட்டம் நடத்திய அரசு ஊழியர் சங்கங்கள் உள்ளிட்ட துறைவாரி சங்க போராட்டம் நடத்தினால் அழைத்துபேசி தீர்வு காணாமல் ஊழியர்களை சங்கத் தலைவர்களை பழி வாங்கும் நோக்கத்தோடு தொடர்ந்து செயல்பட்டு வந்தது. இந்த அதிமுக அரசை அப்புறப்படுத்த சட்டமன்றத் தேர்தலில் வாக்குரிமை என்ன என்பதை நிரூபித்துள்ளோம்.

## வாக்குரிமை வரலாறு

“அறியப்பட்ட வரலாறுகளில்
எந்தவொரு ஒடுக்கப்பட்ட சமூகமும்
அரசின் தாராளத்தனத்தாலோ, சலுகைகளாலோ
விடுதலையை அண்டியதால் செய்திட இல்லை
சலுகைகளுக்குக்கூட போராட்டம்தான்
காரணமாய் இருந்திருக்கிறது”

வாக்குரிமை என்பது மனித உரிமையாகும். இந்த மனித உரிமை பிறப்புரிமையாகும். இதற்கு மற்றொரு பெயர் அடிப்படை உரிமை என்பதாகும். அது யாரும் கொடுத்த பெற வேண்டிய ஒன்றல்ல. மாறாக இயற்கையாய் இருக்க வேண்டிய இயல்புரிமையாகும். மனிதனை மனிதனாக மதிப்பதே மனித உரிமை. தனிமனித உரிமைகளுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத நிலையொன்றே ஒரு சமுதாயத்தை நாகரிகமுடையதாக அடையாளப்படுத்தும் இரு பக்கங்களாகும். இத்தகைய மகோதன்னதமான உரிமை வெயிலில் உழைக்கும் மக்களுக்கு தானாய் வந்து சேர்வதில்லை. நீண்டநெடிய போராட்டங்களுக்குப் பின்பே இந்த உரிமை கிடைத்துள்ளது.

காலங்காலமாக மன்னன் இறைவனுக்குச் சமமாக கருதப்பட்ட நிலையானது ஐரோப்பாக் கண்டத்தில் கடந்த சில நூற்றாண்டுகளுக்கு முன் கேள்விக்குள்ளானது. சில குறிப்பிட்ட பிரிவினரின் நல உரிமைகள் குறித்து நிதி வழங்குமாறு 1215ஆம்

ஆண்டு பிரிட்டிஷ் மன்னர் ஜான் என்பவரிடம் சில மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதில் உரிய தீர்வு காணப்படவில்லையெனில் இங்கிலாந்து நாட்டில் உள்நாட்டுப் போர் வெடிக்கும் சூழல் நிலவியது. அதனை தவிர்ப்பதற்கு அரசன் ஜான் "மகா சாசனம்" ஒன்றைப் பிரகடனம் செய்தார். பின்னர் வந்த பல்வேறு நாடுகளின் அரசியல் உரிமைச் சாசனங்களுக்கெல்லாம் முன்னோடியாக இது கருதப்பட்டது. ஆனால் இந்த சாசனம் 1215ல் உழைப்பாளி மக்களுக்கு எந்த உரிமையையும் வழங்கிவிடவில்லை. காரணம் அன்று ஏற்பட்ட மக்கள் எழுச்சிக்கு தலைமையேற்றது நிலப்பிரபுக்களே. எனவே நிலப்பிரபுக்கள் மற்றும் வியாபாரிகளின் உரிமைகளை காப்பதாகவே அந்த மகா சாசனம் இருந்தது. எனினும் இதுவே மனித உரிமையின் தோற்றுவான் என கருதப்படுகிறது.

அதன்பின்பு மக்களின் கொந்தளிப்பான நிலை நீடித்து வந்ததால் 1295ல் இங்கிலாந்தில் "சாதாரண மக்களுக்கான சபை" (House of Commons) அமைக்கப்பட்டது. ஆனால் இதுவும் உழைக்கும் மக்களின் உரிமையையும் வழங்கிவில்லை. அதனைத் தொடர்ந்து உலக முழுவதும் மனித உரிமைக்கான குரல் ஆங்காங்கே ஒலிக்கத் தொடங்கியது. மனிதனின் இயற்கையான உரிமைகள் உலகம் தழுவியது அதனை எவரும் மறுக்க முடியாது என குரோட்டியஸ் (Crotious) எனும் கிரேக்க தத்துவ ஞானி 1688ஆம் ஆண்டு இங்கிலாந்தில் உரிமைச் சாசனம் (Bill of Rights) ஆட்சியாளர்கள் ஒப்புதலுடன் நடைமுறைக்கு வந்தது. இவற்றினாலும் குறிப்பிடத்தக்க உரிமைகள் எதுவும் சாமான்ய மக்களுக்கு கிடைத்துவிடவில்லை. "மனித உரிமை" என்ற சொல்லே 1716ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனத்தில்தான் முதன்முதலாக பயன்பட்டதாக தெரிய வருகிறது.

இத்தகைய சங்கிலித் தொடர் நிகழ்வுகளின் தொடர்ச்சியாக 1775 முதல் 1783 வரை நடந்த அமெரிக்கா சுதந்திரப் போரும் 1789 முதல் 1791 வரை நடந்த பிரெஞ்சுப் புரட்சியும் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்ற புரட்சிகரப் போராட்டங்களாக நடைபெற்றன. ஆனால் வழக்கம்போல் இப்புரட்சிகளும் தொழிலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்பட்டதால் அவர்கள் மட்டுமே ஆதாயம் அடைந்தனர். இருப்பினும் பிரெஞ்சுப் புரட்சி முன்வைத்த முழக்கங்களான "சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம்" என்கிற முழக்கம் உலகம் முழுவதும் பரவியது. இந்த உயரிய லட்சிய முழக்கங்களோடு பிறந்த பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக 1789ஆம் ஆண்டு "மனித மற்றும் குடிமக்கள் உரிமை பிரகடனம்" (The declaration of right ot man and citizen) உருவாயிற்று. மனித உரிமை வரலாற்றுக் களத்தில் முதல் தடமென இது கருதப்படுகிறது.

பிரெஞ்சுப் புரட்சியின் அடுத்தகட்டமாக பிரான்ஸ் நாட்டு தொழிலாளர்களின் தலைமையில் 1831ஆம் ஆண்டு "பாரிஸ் கம்யூன்" என்றழைக்கப்பட்ட ஒரு தொழிலாளி வர்க்க புரட்சி நிகழ்ந்தது. உண்மையில் தொழிலாளி வர்க்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் ஏற்கனவே இருந்த அரசு நிர்வாகக் கட்டமைப்பை தொழிலாளிகளை சுரண்டுவதற்காக அப்படியே பயன்படுத்தியது. உழைப்பாளிகளை சுரண்டுவதற்காக ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட கட்டமைப்பை அப்படியே பயன்படுத்தியதால் பாரிஸ் கம்யூன் 1837 மார்ச் 18லிருந்து மே 28 வரை 72 நாட்கள் மட்டுமே நீடிக்க முடிந்தது.

## அனைவருக்கும் வாக்குரிமை

1835 முதல் 1848 வரையிலும் இங்கிலாந்து நாட்டின் உழைக்கும் வர்க்கம் தான் சொந்தக்காலில் நின்று "அனைவருக்கும் வாக்குரிமை" என்ற கோரிக்கையை முன்வைத்து மகத்தான போராட்டங்களை நடத்தியது. "சாசன இயக்கம்" என்ற தொழிலாளர் இயக்கமாக அது வடிவம் கொண்டது. அப்போராட்டத்தை இங்கிலாந்து நாட்டு ஆளும் வர்க்கம் வன்முறையால் நசுக்கியது. எனினும் உலக மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை என்பது அந்தத் தொழிலாளிகளின் போராட்டத்தால் தான் வந்தது. எந்தவொரு முதலாளி வர்க்கத்தின் பெருந்தன்மையினாலும் அது வரவில்லை. இங்கிலாந்து நாட்டு தொழிலாளர்கள் ரத்தம் சிந்தித்தான் எல்லோருக்கும் வாக்குரிமை பெற்றுத்தந்தார்கள்.

மேற்கண்ட வாக்குரிமையின் வலிமை என்ன என்பதை கடந்த அதிமுக ஆட்சியாளருக்கு உணர்த்தும் வகையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தமிழக வரலாற்றில் இப்படி ஒரு நிகழ்வு இனிமேல் யாரும் நடத்த முடியுமா என்றால் கேள்விக்குறிதான். ஆம் 2020 டிசம்பர் தர்மபுரி மாநில பிரதிநிதித்துப் பேரவையில் முடிவெடுத்து ஆண்டு துவக்கமான 2021ல் ஜனவரி பிரச்சாரம்,

ஜனவரி 18, 19ஆம் தேதிகளில் மண்டல அளவில் போராட்ட ஆயத்த மாநாடு, மாநில அளவில் ஜனவரி 27 மதுரையில் போராட்ட ஆயத்த மாநாடு மாநாட்டில் நடைபெற்று புதிதாக பதவி ஏற்றுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று பேசினார். அதில் சில கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பளித்த அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வழக்கமான மாநாடாக இல்லாமல் போராட்டத்திற்கான ஆயத்த மாநாடாக கூட்டி இருக்கிறீர்கள்.

இழந்ததை மீட்டிட, இருப்பதை காத்திட என்ற உங்களது அறிவிப்பிலேயே அனைத்தும் அடங்கிவிட்டது. அதிமுக அரசு அனைத்து உரிமைகளையும் பறித்துவிட்டது. இனிமேல் பறிப்பதற்கு எதுவும் இல்லை என்பதைச் சொல்லாமல் சொல்லி இருக்கிறார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

நமது கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியது பழைய பென்சன் திட்டம் நடைமுறைப்படுத்துவது, 21 மாத நிலுவை ஊதியம், சத்துணவு மற்றும் அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர், ஊர்ப்புற நூலகர்கள், எம்ஆர்பி செவிலியர்கள், காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். முடக்கப்பட்ட அகவிலைப்படி, பறிக்கப்பட்ட சரண்டர் (தற்போது 1212 செவிலியர்கள் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளது தமிழக அரசு) 2002ஆம் ஆண்டு பணிநீக்கம் செய்யப்பட்ட சாலைப் பணியாளர்களின் பணிக்காலத்தை பணிக்காலமாக வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கை அனைத்திற்கும் தார்மீக அடிப்படையில் எனது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறேன். தி.மு.கழக அரசு அமைந்ததும் இக்கோரிக்கைகள் அரசால் பரிசீலிக்கப்பட்டு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்ற உறுதிமொழியையும் இந்த மாநாட்டின் மூலமாக அரசு ஊழியர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று உரை நிகழ்த்தியது தற்பொழுது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நினைத்து பார்க்கிறோம். எனவே எங்களது கோரிக்கை தங்களது அரசு நிறைவேற்றப்படும் என்று நம்பிக்கை உள்ளது.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஒரு மாநிலத்தின் அடிநாதம். அரசு ஊழியர்கள் அரசாங்கத்தை வழிநடத்துபவர்கள், அனைத்துத் திட்டங்களையும் மக்களுக்கு கொண்டு சேர்க்கும் பணி செய்பவர்கள் அரசு ஊழியர்கள் தான் அதை திமுக அரசு மறக்காது. ஆசிரியர்கள் பணி தியாகப்பணி எதிர்காலத்தை உருவாக்குபவர்கள் தான் ஆசிரியர்கள், என்று இன்னும் பல்வேறு கருத்துக்களை மாநாட்டில் பேசியது. இறுதியாக பிப்ரவரி 2ஆம் தேதி முதல் தொடர் மறியல் நடத்த இருப்பதாகவும் அது சிறை நிரப்பும் போராட்டமாக இருக்கும் என்றும் நீங்கள் அறிவித்துள்ளீர்கள். உங்கள் போராட்டத்தை தார்மீக அடிப்படையில் நாங்கள் ஆதரிக்கிறோம். கழக ஆட்சி அமைந்ததும் அரசு ஊழியர் சங்கங்களை அழைத்து பேசி நல்ல முடிவுகளை எடுப்போம் என்று உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து மாநில முழுவதும் தொடர் மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டம் மிக எழுச்சியோடு தமிழகம் முழுவதும் நடைபெற்றது. தொடர்ந்து தமிழக வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் பிப்ரவரி 19 கோட்டை முற்றுகை போராட்டத்தை நடத்தி கடுமையான அடக்குமுறைகளை சந்தித்து அதை எதிர்கொண்டு அரசு ஊழியர்கள் மத்தியில் இந்த அதிமுக அரசின் ஜனநாயக விரோத, ஊழியர் விரோத நடவடிக்கைகளை தமிழகம் முழுவதும் கொண்டு சேர்க்கும் பணியை செய்ததோடு மட்டும் அல்ல, நடைபெற இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் நம்மை புறக்கணித்த வஞ்சித்த அதிமுக அரசை தமிழகம் முழுவதும் உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இந்தத் தேர்தலில் 100% வாக்கு அளிக்கவும், அனைவரும் ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தோம். அதன் வெளிப்பாடுதான் தற்போது புதிதாக பொறுப்பேற்றுள்ளது. தமிழக அரசில் சட்டமன்றத் தேர்தலில் 10க்கு மேற்பட்ட தொகுதிகளில் தபால் வாக்கில் திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் வென்று உள்ளார்கள் என்பதை நினைவில் கொள்வோம்.

## தமிழக அரசின் ஆக்கப்பூர்வமான துவக்கம்

தமிழக சட்டப்பேரவைக்கு நடைபெற்ற 16வது பொதுத்தேர்தலில் 133 தொகுதிகளை வென்று திமுக தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பு ஏற்றுக்கொண்டார்.

தமிழகத்தின் முதலமைச்சராக மாண்புமிகு மு.க.ஸ்டாலின் பதவியேற்ற கையோடு மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் 5 முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டுள்ளது வரவேற்கத்தக்கது, ரேஷன் அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண நிதியாக ரூ.4000 வழங்கப்படும் என்று வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக மே மாதம் முதற்கட்டமாக ரூ.2000 வழங்கப்படும் என்ற அறிவிப்பும் கடந்த அதிமுக ஆட்சியில் உயர்த்தப்பட்ட ஆவின் பால் விலையை லிட்டருக்கு ரூ. 3 குறைத்து வெளியிட்ட அறிவிப்பு மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

நகரங்களில் இயக்கப்படும் சாதாரண கட்டண பேருந்துகளில் பணிபுரியும் மகளிரும் உயர்கல்வி பயிலும் மாணவியர் உட்பட அனைத்து மகளிரும் கட்டணமில்லாமல் பயணிக்கலாம் என்ற அறிவிப்பு மக்களிடம் இந்த அரசு மீதான நம்பிக்கை கூடுதலாக்கியுள்ளது. இதனால் ஏற்படும் கூடுதல் தொகையான ரூ.1200 கோடி மான்யமாக அரசே ஈடுகட்ட முன்வந்திருப்பது.

மாவட்டந்தோறும் மக்களிடம் பெறப்படும் மனுக்கள் மீது ஆட்சிக்கு வந்த நூறு நாட்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தீர்வு காணப்படும் என்ற அறிவிப்பு (தற்போது நடைமுறைக்கு வந்துவிட்டது) ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளுக்கான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டுக்கென தனிக் கல்விக் கொள்கையை உருவாக்குதல் மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழை இடம்பெறுவதற்கான முயற்சிகள் தமிழகத்தில் உள்ள அரசு அலுவலகங்களில் தமிழை அலுவலக மொழியாக்குதல், தமிழை உயர்நீதிமன்ற மொழியாக அங்கீகரிக்க வெளிப்படையான நிர்வாகம், சேவை உரிமைச் சட்டம், வேளாண் துறைக்கென்று தனி நிதிநிலை அறிக்கை உள்ளிட்ட திமுக அரசு இதர வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையை புதிய அரசு விதைத்துள்ளது.

விவசாயிகள் கடன் தள்ளுபடி, அரசு ஊழியர்களுக்கு ஓராண்டு மகப்பேறு விடுப்பு, முதியோர் உதவித்தொகை உயர்வு, கல்விக்கடன் தள்ளுபடி, ஆட்டோ வாங்க மானியம், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அரசு ஊழியர் ஆசிரியர்களின் கோரிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகள் தொடர்பான அறிவிப்புகள் அடுத்து அடுத்து வரும் என்ற நம்பிக்கை தமிழக மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தீர்க்கப்படாத நெடுநாள் கோரிக்கை உள்ளன. அதை தீர்ப்பதோடு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட தொலைநோக்கு பார்வையோடு புதிய தொழிற் கொள்கைகளை வகுத்தல், அரசு அலுவலகங்களில் காலிப் பணியிடங்களுக்கு பூர்த்தி செய்திடவும் (தற்போது மருத்துவ துறைக்கு மருத்துவர்கள் உட்பட 10 ஆயிரம் நியமனம் செய்துள்ளதை வரவேற்கிறது. அதை காலமுறை ஊதியத்தில் நியமித்திட வேண்டும் என நமது சங்கம் கோரிக்கை வைத்துள்ளது) பொதுத்துறை நிறுவனங்கள் சீரமைத்தல் ஆகிய நடவடிக்கைகள் வாயிலாகக் கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் பின்தங்கிய தமிழகத்தை மீண்டும் வளர்ச்சிப் பாதைக்குத் திரும்புவதே முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

ஆம் தோழர்களே ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுத்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மகத்தான மக்கள் தீர்ப்பு வழங்கி உள்ளார்கள். இந்த மகிழ்ச்சியான தருணத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி அரசு ஊழியர்களாகிய நாமும் ஒரு சிறு பங்களிப்பை செலுத்துகிறோம் என்று பெருமிதம் கொள்வோம். இந்த வெற்றியில் நமது பங்களிப்பு இருந்தாலும் அது மதிப்புமிக்கதாக இருந்திருக்கிறது.

எதிர்காலத்தில் மத்திய அரசின் மக்கள் விரோத ஊழியர் விரோத மதவெறி சக்திகளுக்கு எதிராகவும் பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாப்பதற்கும் தமிழகம் இழந்துள்ள உரிமைகளை மீட்டிடவும் சமூக நீதி காத்திடவும் கொரோனா கொடுமைகளிலிருந்து ஊழியர்களையும் மக்களையும் பாதுகாக்க வேண்டிய அரும்பணியில் புதியதாத பொறுப்பேற்றுள்ள அரசும், ஊழியர்களும், மக்களும் இணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது. அப்பணிகளில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இந்த அரசாங்கத்திற்கு பக்கபலமாக இருந்து தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு நமது முழு ஒத்துழைப்பு நல்குவோம்.

ஒன்றுபடுவோம்!

போராடுவோம்!!

முன்னேறுவோம்!!!

■

# கொரோனாவில் உயிரிழந்த அரசு ஊழியர்களுக்கு ரூ.25 லட்சம் வழங்கக் கோரி முதல்வருக்கு அளித்திட்ட முறையீடு

பெறுநர்

1. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
   தலைமைச் செயலகம், சென்னை-600009
2. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள்
   தலைமைச் செயலகம், சென்னை-600009
3. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்
   தலைமைச் செயலகம், சென்னை-600009

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், கொரோனா இரண்டாவது அலை அதிதீவிர தொற்று பரவலை கட்டுப்படுத்தி முன்களப்பணியாளர்களுக்கு தொற்று பாதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி இறந்த ஊழியர்களுக்கு ரூ.25 லட்சம் இழப்பீடு தொகை வழங்கிட கோருதல் - தொடர்பாக

*****

வணக்கம்.

கோவிட்-19 எனப்படும் கொரோனா தொற்றின் இரண்டாவது அலை அதிதீவிரமாக பரவிவருகிறது. நாளது தேதி வரை(மே-27) இந்தியாவில் 2.40 கோடி பேர் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதில் தமிழகத்தில் 19,98,625 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தின் மொத்த பாதிப்பில் தலைநகர் சென்னையில் மட்டும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4,93,081. கொரோனாவால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

தமிழகத்தில் நடைபெற்று முடிந்துள்ள சட்டமன்ற தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி மகத்தான வெற்றி பெற்றுள்ளது. திரரவிட முன்னேற்ற கழகம் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள தங்களுக்கும், தங்களது அமைச்சரவைக்கும் ஏற்கனவே வாழ்த்து தெரிவித்திருயதாலும் மீண்டும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் இதயப்பூர்வமான வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த 10 ஆண்டுகளாக, தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் தமிழகத்தை சமூக பொருளாதார ரீதியாக பின் தங்கிய மாநிலமாகவும், மாநில உரிமைகளை விட்டுக்கொடுத்து (நீட் தேர்வு உட்பட) எப்படியாவது ஆட்சிப் பொறுப்பில் நீடித்தால் போதும் என்ற நிலையிலேயே செயல்பட்டு வயததை தமிழக மக்கள் மற்றும் அரசு ஊழியர் ஆசிரியர்களும் நன்கு அறிவார்கள்.

இந்நிலையில் தமிழக முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள தாங்கள் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதமாக பொறுப்பேற்ற முதல் நாளிலேயே மக்கள் நலன் சார்ந்த ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றியிருப்பதை வரவேற்கிறோம்.

மேலும் இந்தியாவில் தமிழகம் எப்போதும் முன்னோடி மாநிலமாக இருந்து வயதிருக்கிறது. சமூக நீதி, சமத்துவம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், பெண்களுக்கான உரிமை போன்ற பல துறைகளில் முன்னோடியாக இருந்த மாநிலம் கடந்த அதிமுக ஆட்சியில் எல்லாவற்றிலும் பின்னுக்கு தள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு காரணம் தமிழகத்தில் கல்வி, வேலைவாய்ப்புகளில் இம்மாநில இளைஞர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுவதும், அரசு பள்ளிகள் மற்றும் அரசு துறைகளை தனியார்மயமாக்கும் முயற்சியில் சென்ற அதிமுக அரசு அதிதீவிரமாக ஈடுபட்டது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

இச்சூழ்நிலையில்தான் கடந்த ஜனவரி 2021, 27ம் தேதி மதுரையில் எங்கள் சங்கத்தின் சார்பில் மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாடு நடைபெற்றது. அதில் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி அரசியல் கட்சித் தலைவர்கள் காணொலி காட்சி மூலம் உரை நிகழ்த்தினார்கள். அதில் தாங்கள் திமுக தலைவர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் என்ற முறையில் பங்கேற்று “உரிமை முழக்கம் உரத்து ஒலிக்கட்டும், உரிமை மீட்பு வெறும் போரல்ல புனிதப்போர்” என்ற தலைப்பில் தாங்கள் உரை நிகழ்த்தியது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் மிகுந்த உற்சாகத்தையும், நம்பிக்கையும் ஏற்படுத்தியது. குறிப்பாக புதிய பென்சன்

ரத்து, தொகுப்பூதியம் ரத்து, இழந்த கோரிக்கைகளை கழக அரசு ஆட்சிக்கு வந்தவுடன் பரிசீலித்து அரசு ஊழியர் ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் எனவும் தாங்கள் மாநாட்டில் பேசினீர்கள். அதுமட்டுமல்ல. அரசு ஊழியர் ஆசிரியர்களின் கோரிக்கைகள், திமுக தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றது என்பது அரசு ஊழியர்கள் மத்தியில் மீண்டும் மிகுந்த நம்பிக்கை ஏற்படுத்தியது என்பதை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல் கடந்த அதிமுக அரசு, அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க முன்வராமல் அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் அவர்தம் பணிகளையும் இழிவுபடுத்தும் வகையில் பேசியும், செய்திகள் வெளியிட்டும் வந்தது தாங்கள் அறிந்ததே. மேலும் அதிமுக அரசின் சாதனையாக இருந்தது. கடந்த அதிமுக அரசு அரசு ஊழியர்களை ஒரு பொருட்டாகக்கூட மதிக்காமல், தன்னுடைய ஆட்சியை தக்க வைக்க மத்திய அரசின் கொள்கைகளை அப்படியே அமுல்படுத்தியது மட்டுமல்ல. சுமார் 20 முறைகளுக்கு மேலாக அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தங்களுடைய கோரிக்கைகள் குறித்து பேசிட முன்னாள் முதல்வரிடம் நேரம் கேட்டும் ஒரு முறைகூட அவர் எங்களை சந்தித்து பேச முன்வராதது, அவர் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை எந்த இடத்தில் வைத்திருந்தார் என்பதற்கு மேற்கண்ட உதாரணங்களாகும்.

ஆனால் தங்களுடைய கட்சியும், தாங்களும் எங்களுடைய உரிமைகளுக்காக குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி அமையதவுடன் புதிய பென்சன் திட்டம் திரும்ப பெறுவது உள்ளிட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் பறிக்கப்பட்ட கோரிக்கைகளை பரிசீலித்து சங்கத் தலைவர்களை அழைத்துப்பேசி முடிவெடுக்கப்படும் என அறிவித்து எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை அளித்தீர்கள். திராவிட முன்னேற்ற கழக ஆட்சி கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த காலங்களில் எல்லாம் அரசு ஊழியர்களுக்கு சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்திருக்கிறார். அந்த வகையில் தாங்களும் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து நிறைவேற்றுவீர்கள் என்ற முழு நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

இச்சூழலில் அரசு அலுவலகங்களில் பணியாற்றும் அரசு ஊழியர்களையும் தொற்று இரண்டாவது அலை வேகமாக பாதித்து வருகிறது. தமிழகத்தில், அரசுத்துறைகளில் பணிபுரியும், ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள், அரசின் உத்தரவுபடி, மக்களை பாதுகாக்கும் பணியில், அர்ப்பணிப்பு உணர்வோடு களத்தில் பணியாற்றி கொண்டிருக்கும்போது இந்நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தொற்று நாளுக்குநாள் அதிதீவிரமாக பரவி வருகிறது. இதனால் அரசு ஊழியர்கள் பெரும் அச்சத்திற்கு ஆளாகி உள்ளனர். இருப்பினும் அரசின் உத்தரவுகளை மக்களை பாதுகாக்கும் வகையில் அரசு ஊழியர்கள் உயிரை துச்சமென மதித்து களத்தில் பணியாற்றி கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல . மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு அர்ப்பணிப்பு உணர்வோடு களப்பணியாற்றும் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்காக தங்களது ஒரு நாள் ஊதியமான ரூ.150 கோடி வழங்க முடிவு செய்து எற்கனவே விருப்ப மனு தமிழக அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

தமிழகத்தில் கொரோனா பெருயதொற்று இரண்டாம் அலை மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. கொரோனா தடுப்பு பணியில் ஈடுபட்டு நோய் தொற்றுக்கு ஆளாகி உயிரிழந்துள்ள மருத்துவர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள் மற்றும் காவல்துறையினர், நீதிபதிகள் ஆகியோருக்கு தமிழக அரசு இறந்த மேற்கண்ட ஊழியர்களின் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் முதலமைச்சர் நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளது. அதைத்தொடர்யது மருத்துவ முன் களப்பணியாளர்களுக்கு அறிவித்த தமிழக அரசு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளதையும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் வரவேற்கிறோம்.

தமிழக அரசு, அறிவித்த ஊக்கத்தொகையை வழங்கிடவும், அதைத்தொடர்யது முன் களப்பணியாளர்கள் அனைவருக்கும் ஊக்கத்தொகை வழங்குவதற்கான அரசாணை வெளியிட வேண்டும்.

எனவே, அரசு ஊழியர்களின் பாதுகாப்பு கருதியும், அரசு ஊழியர்களின் சேவை என்பதை முழுமையாக பொது மக்களுக்கு அளிக்கும் வகையிலும் கீழே சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் எங்களது நியாயமான கோரிக்கைகளை உடனடி கவனம் செலுத்தி உரிய உத்தரவுகளையும், ஆணைகளையும் பிறப்பிக்குமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

1.கொரோனா தடுப்பு பணியில் ஈடுபட்டு, நோய் தொற்றுக்கு ஆளாகி இறந்துள்ள செவிலியர்கள், ஆய்வக நுட்பனர்கள், மருந்தாளுநர்கள், ஊடுகதிர் நுட்பனர்கள், சுகாதார ஆய்வாளர்கள், வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், ஊரகவளர்ச்சித்துறை, கூட்டுறவுத்துறை, உணவுத்துறை, தீயணைப்புத்துறை, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி உள்ளிட்ட பிற துறை ஊழியர்களுக்கும் கொரோனா நோய் தடுப்பு பணியில் ஈடுபட்டு, நோய் தொற்று ஏற்பட்டு உயிர் இழக்கும்

நிலையில் அவர்களுக்கும், அனைத்துத்துறை அரசு ஊழியர்களுக்கும் ரூ.25 லட்சம் நிவாரண தொகையினை வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

2. கொரோனா நோய் தடுப்பு பணியில் ஈடுபட்டு உயிர் இழந்த அரசு ஊழியர்களின் அவர்தம் குடும்பத்தில் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் வேலை வழங்கப்படும் என சென்ற ஆண்டு 2020 தமிழக அரசு அறிவித்தது. அது முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. அதனால் தற்போது நோய் தடுப்பு பணியில் ஈடுபட்டு இறக்கும் ஊழியர்களுக்கு நிபந்தனையின்றி குடும்பத்தில் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் அரசு வேலை வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

3. மேலும் ஊழியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கு முககவசம், கிருமி நாசினி, ஜின்க் மாத்திரைகள், மல்டி வைட்டமின் மாத்திரைகள், கபசுர குடிநீர், கோவிட்-19 ஆரோக்கிய பெட்டகம் போதுமான அளவில் அனைத்து அலுவலகங்களுக்கும் வழங்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

4. கொரோனா பெருந்தொற்றால், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உயிரிழந்துள்ளனர். லட்சக்கணக்கானோர் நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்நிலையில் தமிழக அரசு கொரோனாவினால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கட்டணமில்லா சிகிச்சை பெற தமிழக அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் வரவேற்கிறோம்.

கடந்த ஆண்டு தமிழக அரசு ஊழியர்,ஆசிரியர்கள் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் (NHIS) கொரோனா நோய்த் தொற்றுக்கு சிகிச்சை பெற தமிழக அரசு ஆணை வெளியிட்டது. அதில் கொரோனா நோய்க்கு கட்டணமில்லா சிகிச்சை உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே தனியார் மருத்துவமனைகளில் வசூலிக்கப்படும் கட்டணத்தைவிட மிகக் குறைந்த தொகையே அனுமதிக்கப்பட்டது.

எனவே கொரோனா, கறுப்பு பூஞ்சை நோய்களுக்கு புதிய மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு கட்டணமில்லா சிகிச்சை வழங்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

5.கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு நேரடியாக சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவ ஊழியர்கள் அனைவருக்கும் கொரோனா தொற்றிலிருயது பாதுகாத்திடும் வகையில் தரமான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் (PPE Kit) வழங்கிட கேட்டுக்கொள்கிறோம்.

6. பொது சுகாதாரத்துறையின் உத்தரவை மீறி கொரோனா சிகிச்சையில் ஈடுபத்தியதால் கர்ப்பிணி மருத்துவர் உயிர் இழக்கும் நிலை உள்ளது. எனவே கர்ப்பிணிகளாக உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்து வகை பணியாளர்களையும் கொரோனா சிகிச்சைப்பணியில் ஈடுபடுத்த வேண்டாம். எனவே தமிழக அரசு கொரோனா பணியிலிருயது விலக்கு அளிக்கும் வகையில் மற்ற துறையிலுள்ள முன் களப்பணியாளர்களுக்கும் பொருயதும் வகையில் அரசு உத்தரவு வழங்கிட ஆவன செய்திட வேண்டும்.

7. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி கொரோனா தொற்றினை எதிர் கொள்வதற்கு தமிழக அரசு போர்க்கால நடவடிக்கையில் மருத்துவதுறைக்கு புதிய நியமனமாக மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவத்துறை பணியாளர்களை நியமனம் செய்ய அறிவிப்பு வெளியிட்டுள்ளதை வரவேற்கிறோம். அதே வேளையில் அப்பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் நியமனம் செய்திட தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம்.

8. கொரோனா தொற்றின் தீவிரத்தை கருத்திற்கொண்டு தமிழக அரசு தமிழக முழுவதும் கொரோனா சிகிச்சைக்கான படுக்கை வசதியின் எண்ணிக்கை உயர்த்தியுள்ளது வரவேற்கத்க்கது. அதே வேளையில், படுக்கை வசதி உயர்த்தியுள்ள எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான ஊழியர்களின் எண்ணிக்கை பூர்த்தி செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

உயிர் காக்கும் சிகிச்சை பணிகளிலும், இரவு-பகல் பாராமல், கண் துஞ்சாமல், உயிரை பணயம் வைத்து மக்களுக்கு சேவை செய்து வரும் அரசு ஊழியர்களின் மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலித்து உரிய உத்தரவுகளை பிறப்பிக்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக்கொள்கிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(மு. அன்பரசு)
மாநிலத் தலைவர்

(ஆ. செல்வம்)
பொதுச்செயலாளர்

# நம்பிக்கை நெம்புகோலுடன்...

புலரும் காலைப் பொழுது
மலரும் வாழ்த்துகள்
பிறந்தநாள் மணநாளுக்கு அர்த்தமிழக்கிறது
அணிவகுத்து வரும் அஞ்சலி இரங்கலூடே

ஒருவருக்கு அஞ்சலி செலுத்தி
அவரது நினைவுகளைக்
கலங்கிக் கடக்கு முன்பே
இன்னொருவரின் இறப்புச் செய்தி
இதயத்தைக் கரைக்கிறது

தோழமை மரணங்கள்
வாழ்வுக்கான போரில்
அவர்களது பாடுகளை
எண்ண எண்ண
பாடாய்ப் படுத்துகிறது ரணங்கள்

உறவுகளின் மரண ஓலம்
உறவாடத் தவறவிட்ட நாட்களை
நினைந்து நினைத்து நெக்குருகுகிறது

உடன் பணியாற்றிய
அன்புக்குரியவர்களின் இழப்பு
அனலாய்த் தகிக்கிறது

நட்புக்களின் மறைவுச் செய்திகள்
நெஞ்சை நெகிழச் செய்கின்றன

வாழவேண்டிய இளசுகளின் மரணங்கள்
வாழ்ந்து முடிவில் இருப்போரின்
இதயங்களைப் பிழிகிறது

சமூக வலைதளங்களைத் திறக்காதிருக்க
முனையும் மனம்

திடீர் மரணங்கள் தெரியாமல்
யாருக்கென்னவோ என
திக்திக்கெனும் தினம்

எதிர்கொண்டுதான் ஆகவேண்டும்
நடந்தவை மாற்ற இயலாதவை
நடப்பவைக்கு எச்சரிக்கை தருபவை

நினைத்துப் பார்த்திராத
கனக்கும் அஞ்சலிகளும்
இரங்கல்களும்
மனிதகுல சவால்களை எதிர்கொள்ள
இனி செய்ய வேண்டியவை
அறிவியல் இலக்குகளின்
இறகுகளை விரிக்கிறது

பெரும் மனித அறிவுத்திறன்
பெருந் தொற்றுக்கு
மரண சாசனம் எழுதத்
தயாராகட்டும்
அது முடியும் வரை
சாமானியர்கள்
உயிர்காக்க
கொரோனா கட்டுப்பாடுகளில்
தளர்வற்றுத் தடம் பதிக்கட்டும்

நாம் வெல்லுவோம்
கொடிய கொரோனாவையும்

நம்பிக்கை நெம்புகோலுடன்
நம் பயணம் தொடரட்டும்

- **பெரணமல்லூர் சேகரன்**

---

# இரங்கல்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வடசென்னை மாவட்ட தலைவரும் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவருமான ப. சுந்தரம்பாள் அவர்களின் கணவர் சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் சிகிச்சை பலனின்றி 10.5.2021 அன்று காலை இயற்கை எய்தினார் என்ற செய்தி மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

★★★

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கரூர் மாவட்ட பொருளாளரும், தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளருமான பொன்.ஜெயராம் அவர்களின் தாயார் 10.5.2021 அன்று இயற்கை எய்தினார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கும், தோழர்களுக்கும் சங்க மாநில மையம் ஆழ்ந்த அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறது.

## சென்னையில் நிவாரண உதவி

தமிழ்நாடு மருத்துவத் துறை நிர்வாக ஊழியர் சங்கம், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தென்சென்னை மாவட்டத்துடன் இணைந்து தொடர்ந்து ஐந்தாவது முறையாக டி.எம்.எஸ் வளாகத்தில் 21.05.2021 அன்று பிற்பகல் 2.30 மணி அளவில் CORONA பெருந்தொற்றின் இரண்டாவது அலை காரணமாக விதிக்கப்பட்ட பொது முடக்கத்தினால் பாதிக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தினக்கூலி தொழிலாளர்களுக்கு 1.5 டன் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.

1. பொன்னி அரிசி 10 கிலோ
2. சத்து மாவு ஒரு கிலோ 1
3. சர்க்கரை ஒரு கிலோ 1
4. சமையல் எண்ணெய் 1
5. துவரம் பருப்பு 1/2
6. சலவை சோப்பு 1
7. மிளகாய் வத்தல் 250
8. மஞ்சள் தூள் 100
9. உப்பு பாக்கெட்

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு நிவாரண பொருட்களை வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். மருத்துவத் துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.பிரபுராம், பொதுச் செயலாளர் இரா.ந.நம்பிராஜன், அரசு ஊழியர் சங்க தென்சென்னை மாவட்ட இணைச்செயலாளர் மு.செந்தில்குமார், மாவட்ட துணைத்தலைவர் ஜெயராமன், பகுதி குழு இணைச் செயலாளர் சரவணன் மற்றும் சங்க மாநில/மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டு நிவாரண பொருட்களை வழங்கினார்கள்.

அனைத்து துறை மற்றும் பொது சங்க மாவட்ட/ பகுதிக்குழு நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

---

## உள்ளம் என்பது ஆமை... (திரை மெட்டு)

கொரோனா என்பது தொற்று
அது பரவாதிருத்தலே நன்று
சமூக இடைவெளி காத்து
முகக் கவசம் அணிந்து இயங்கு...(கொரோனா)

தொற்றிலும் வணிகக் கொள்ளை
கார்ப்பரேட் மருத்துவம் தொல்லை
தனியார் மருத்துவ மனைகள்
இனி அரசுமயமாதல் முல்லை...(கொரோனா)

ஊரடங் கென்றே தொடர்ந்து
பிழைப் படங்கிப் போனதுவே
உழைக்கத் தயாரென்ற போதும்
வேலை கானல் நீர்தா னாச்சே...(கொரோனா)

ஏறு முகத்தில் தொற்று
அது இறங்குமுகம் என்று கூறு
இரக்கமிலா மைய அரசோ
உதவிக் கரம் நீட்ட வில்லை...(கொரோனா)

அரிசி கோதுமை நிரம்பி
கிடங்கில் வழியும் உணவை
எலிகள் தின்னக் கொடுக்கும்
மனிதர்களுக் கிலவசம் மறுக்கும்...(கொரோனா)

பொதுமுடக் கத்தால் உழல்வோர்
எளியோர் நடுத்தர மக்கள்
வலியோர் பெருநிறு வனங்கள்
களிப்பாய் கொழுக்கும் தினங்கள்...(கொரோனா)


பற்பல லட்சம் கோடி
அறிவித்த பணமெங்கே மோடி
பத்து ரூபாய் கூட
கைவரா பாமரர் கேள்வி...(கொரோனா)

கொரோனா கொடூர காலம்
அரசு சொத்துக்கள் ஏலம்
சிரசாய் ஒற்றுமை நீளும்
முரசு கொட்டுக போர்க் கோலம்...(கொரோனா)

மாறிய மாநில அரசுக்கு
ஒன்றிய அரசின் உதவி
செய்வது கட்டாயக் கடமை
செய்ய வைப்பது நம்அறி வுடமை
(கொரோனா)

- **பெரணமல்லூர் சேகரன்**

# எப்படி பிரியாவிடை அளிப்பது?




இழந்து விட்டோம் மகத்தான தோழரை

ஒப்புவமை அற்ற பெருந்தீபம், அசாத்திய துணிச்சல், வாழ்க்கையின் பளீர் என்ற உருவகம்,

சமரசமற்ற போர்க்குணத்தின் கம்பீரம்.

வியட்நாம் போருக்கு எதிராக ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அதே அமெரிக்கா மண்ணில் அங்கேயே திரண்ட இடது சாரி ஜனநாயக எதிர்ப்புக் குரல்களில் ஆகப் பெரும் சக்தியான குரல்

எல்லாத் தடுப்பும் மீறி, கூரியர் விமானத்தில் அமெரிக்காவில் இருந்து ரகசியமாக கியூப புரட்சிகர மண்ணில் சென்று இறங்கிப் பரவசம் பெற்று வந்த சாகச வீரம்.

கீழ வெண்மணி 1968 டிசம்பர் 25 நிலச் சுவான்தாரர்கள் நடத்திய அராஜகப் படுகொலை சுவடு பார்த்து அதிர்ந்து உலகத்தின் பார்வைக்கு எடுத்துச் சென்ற முதல் எழுத்து.

குவாரி தொழிலாளர் திரட்டி உரிமைகள் வென்றெடுத்த தொழிற்சங்க வேகம்.

உழைக்கும் பெண்கள் அமைப்பின் முதல் கர்ஜனை.

ஜனநாயக மாதர் இயக்கத்தில் முன்னணி பாத்திரம்.

வாச்சாத்தி மலை வாழ் மக்களுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளுக்கு எதிராகச் சுடர் விட்டு நின்ற சரித்திரம்.

அறிவும் ஆற்றலும் தீரமும் துணிவும் தலைமைப் பண்பும்
இன்னும் இன்னும் இன்னும் எல்லாம் இருந்தும்
அன்பின் புன்னகையால் அசாத்திய எளிமையால்
விசாலப் பார்வையால் எண்ணற்ற இதயங்களை விழுங்கிய
பேரன்பின் ஈடற்ற வடிவம்.
தோழர் மைதிலி சிவராமன் அவர்களுக்கு
எப்படி பிரியா விடை அளிப்பது?

- **எஸ்.வி.வி**

# அன்புக்கும் இங்கே பற்றாக்குறை!

அறிவொளிக் காலத்தில் - தீப்பெட்டி, பட்டாசு ஆலைகளில் வதங்கும் குழந்தைகளைக் காண தோழர் மைதிலி சிவராமன் பல முறை விருதுநகர் மாவட்டம் வந்தார். பெரும்பாலும் பெண்குழந்தைகள்! ஒருமுறை விருதுநகரில் குழந்தைகளைச் சந்தித்துவிட்டு கூட்டம் முடிந்ததும் அவர் சொன்னார்: “ கூட்டத்தில் ஒரு குழந்தை என்னையே பார்த்துக் கொண்டிருந்தது. அருகில் அழைத்து அரவணைத்து அந்தக் குழந்தையின் கன்னத்தில் முத்தமிட்டேன். அவ்வளவுதான்! திரும்பிப் பார்த்தால் வரிசையாகக் குழந்தைகள்! முத்தம் கேட்டு நிற்கிறார்கள். ஒவ்வொருவராகக் கூப்பிட்டு முத்தமிட்டேன். பொருளாதார வறுமை மட்டுமா? அன்பும் இவர்களுக்குப் பற்றாக்குறைதான் தோழர்!” என்று சொல்லி உடைந்து கண்கலங்கினார். மைதிலி அவர்களின் பேச்சும் எழுத்தும் ஞாபகத்தில் இருப்பதுபோல், கலங்கி நிரம்பிய அந்தக் கண்களும் எப்போதும் ஞாபகத்தில் இருக்கின்றன.

- **பேரா.மாடசாமி**

## மாற்றம் ஒன்றே மாறாதது

இப்பொழுதெல்லாம்
மரண ஓலங்களுடன்தான்
பொழுது விடிகிறது
பறவைகளின் ஒலி தோற்கடித்து

சமூக வலை தளங்களைத் திறக்க
கரங்கள் நடுங்குகின்றன
ஏதேனும் அழைப்புக்கு பதிலோ
பிறந்தநாள் மணநாளுக்கு வாழ்த்துரைக்கவோ
கைபேசியைத் திறந்தால்
மெய் நடுங்கும் மரணச்செய்தியே
கண்முன் நிற்கிறது

அச்செய்தி எதிர்பாராத
மரணச் செய்தியாகவே
கண்களைக் கலங்க வைக்கிறது

ஒரு செய்திக்கு
இரங்கல் தெரிவித்து
முடிக்கு முன்பே
அடுத்த மரணச் செய்தி
வந்து விழுகிறது

சமூக வலைதள குழுக்கள் பலவற்றில்
பலரின் இறப்புச் செய்திகள்
கட்டற்று கதிகலங்க வைக்கிறது

நம்ப முடியாமலும்
ஏற்க முடியாமலும்
கடந்து போக முடியாமலும்
உடையச் செய்கின்றன? மனதை

அச்செய்தி
இளையவர்கள் வயோதிகர்கள்
ஆண்கள் பெண்கள்
எளியோர் வலியோர்
ஏழை பணக்காரர்
சாதி மதம்
எதையும் பார்ப்பதில்லை

பொதுவாய் மிதந்து வரும்
மரண ஓலமோ
இடைவிடாது தாக்குகிறது இதயத்தை

நேர்மறை செய்திகளை மட்டுமே பதிவிடுங்கள் என
சிலர் வேண்டுவது
அர்த்தமிழக்கிறது
எதை விடுவது
எதைப் பதிவிடுவது
அவரவர்க்கு அவரவர் பதிவு
அவசர அவசியமாகிறது

மனிதகுலப் பேரழிவிற்கு
வழிகோலிய கொரோனா
ஆறாம் அறிவின் சாதனைகளை
எள்ளி நகையாடுகிறது

அளவிலா செல்வங்கள்
காப்பாற்றாத மனித உயிர்
எண்ணிலா தெய்வங்கள்
காப்பாற்றாத உயிர்
கண்ணுக்குத் தெரியாத கிருமியால்
பரிகசிக்கப்படுகிறது

அறிவியல் வென்ற அனைத்தும்
ஆச்சரியப் பூச்சொரிந்தாலும்
கொரோனா தீநுண்மி முன்
வெட்கித் தலை குனிகின்றன

வருமுன் தடுப்பும்
வந்தபின் சிகிச்சையும்
துவங்கி பயணித்தாலும்
தொற்றின் வேகத்தின் முன்
வெற்றி காணாது
உயிரிழப்புகளின் உச்சத்தில்
அச்சமே எச்சமாகிறது

இவ்வளவுக்கு மத்தியிலும்
சோஷலிச நாடுகளில்
குறைவான பாதிப்பும்
மிகக் குறைவான உயிரிழப்பும்
பாடமாகின்றன

அந்நாடுகளில்..
அவ்வரசுகளின் இலக்கு
மனித நேயமும் மக்கள் நலனும்

பட்ட பின்பும்
பார்த்த பின்பும்
பட்டை தீட்டப்படாத மனித மூளை
கோட்டை விட்டு
முதலாளித்துவ அமைப்பில்
நிதமும் பயணித்தலில்
விதவிதமாய் துன்ப துயரங்கள்

மாற்றம் ஒன்றே மாறாதது
தேற்றம் கொள்வது
தேறுவதற்கான வழியது
அறிவியலாய்.. அரசியலாய்..
மானுடம் காக்க
மனிதம் செழிக்க..

*..பெரணமல்லூர் சேகரன்*

**இந்த அரசு தோல்வியுற்றிருக்கிறது என்று மட்டும் சொல்வது போதாது... இந்த அரசு உண்மையில் மனிதகுலத்திற்கு எதிராக இழைக்கப்பட்டிருக்கும் குற்றத்திற்கு சாட்சியாக நின்று கொண்டிருக்கிறது**

*- அருந்ததி ராய்*

**தொ**ற்றுநோயின் இரண்டாவது அலையின் உச்சத்தில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மக்கள் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் அந்த கூட்டத்தில் மோடி உரையாற்றியிருந்தார். அவரது உரையில் அந்த நாடுகளில் அதிகரித்திருந்த தொற்றுநோய் குறித்து அனுதாப வார்த்தைகள் எதுவும் இடம் பெற்றிருக்கவில்லை. மாறாக இந்தியாவின் பெருமை மட்டுமே அவரது உரையில் இருந்தது.

'நண்பர்களே, அச்சம் நிரம்பிய இந்த காலகட்டத்தில் 130 கோடி இந்தியர்களிடமிருந்து துணிவு, நேர்மறையான எண்ணம், நம்பிக்கையை நான் கொண்டு வந்திருக்கிறேன்... உலகெங்கிலும் உள்ள நாடுகளில் இந்தியாவே கொரோனாவால் மிகவும் பாதிக்கப்படப் போகின்ற நாடாக இருக்கும் என்று கணிக்கப்பட்டிருந்தது. கொரோனா நோய்த்தொற்றின் சுனாமி இந்தியாவில் இருக்கும் என்று கூறப்பட்டது. தொற்றுநோயால் எழுபது முதல் எண்பது கோடி இந்தியர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சிலர் கூறினார்கள். மற்றும் சிலர் இருபது லட்சம் இந்தியர்கள் இறந்து போவார்கள் என்று சொன்னார்கள்'.

'நண்பர்களே, இந்தியா அடைந்திருக்கும் வெற்றியை வேறொரு நாட்டின் வெற்றியைக் கொண்டு தீர்மானிப்பது நல்லதல்ல. கொரோனாவைத் திறம்படக் கையாண்டிருப்பதன் மூலம் உலக மக்கள்தொகையில் 18% பேர் வசித்து வருகின்ற நாடான இந்தியா மனிதகுலத்தையே பெரும் பேரழிவிலிருந்து காப்பாற்றியுள்ளது'.

கொரோனா வைரஸை தான் திறம்படக் கையாண்டு மனிதகுலத்தையே காப்பாற்றி விட்டதாகக் கூறி மோடி எனும் மந்திரவாதி அங்கே தலைவணங்கி பாராட்டைப் பெற்றுக் கொண்டார். ஆனால் வைரஸை அவர் கட்டுப்படுத்தியிருக்கவில்லை என்று இப்போது நிலைமை மாறியுள்ள வேளையில் இந்தியாவில் கொரோனா தொற்று மிகவும் தீவிரமாக இருக்கும் என்று அப்போது கணிக்கப்பட்டது குறித்து நாம் இப்போது குறை கூற முடியுமா? மற்ற நாடுகளின்



எல்லைகள் மூடப்பட்டு நம்முடைய விமானங்கள் ரத்து செய்யப்படுவது குறித்து நாம் இப்போது குறை கூற முடியுமா? அனைத்து வகை நோய்கள், மோடியும் அவருடைய கட்சியும் பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்ற அரசியல் முத்திரையான அறிவியல் எதிர்ப்புணர்வு, வெறுப்பு, முட்டாள்தனம் ஆகியவற்றுடன் இந்த வைரஸ் மற்றும் பிரதமருடன் சேர்த்து நம்மை அடைத்து வைத்திருப்பது குறித்து நாம் இப்போது குறை கூற முடியுமா?

கோவிட்-19இன் முதல் அலை இந்தியாவிற்கு வந்து பின்னர் கடந்த ஆண்டில் அது தணிந்தபோது அரசாங்கமும், அதற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்து வருபவர்களும் மிகுந்த வெற்றிக் களிப்புடன் இருந்தனர். 'இந்தியாவில் நிலைமை சரியில்லை' என்று ட்வீட் செய்திருந்த தி பிரிண்ட் இணைய செய்திதளத்தின் தலைமை ஆசிரியரான சேகர் குப்தா 'மனித உடல்களால் நிரம்பி நம்முடைய வடிகால்கள் திணறவில்லை; மருத்துவமனைகளில் படுக்கைகளுக்கு பற்றாக்குறை ஏற்படவில்லை; தகனம் செய்யும் மயானங்கள் மற்றும் கல்லறைகளுக்குத் தேவையான விறகுகளுக்கு அல்லது இடத்திற்கு பஞ்சம் இருக்கவில்லை என்ற தகவல்கள் உண்மையாக இருப்பது அவசியமில்லையா? இவற்றை ஏற்கவில்லை என்றால் அதற்கான தரவைக் கொண்டு வாருங்கள். நீங்கள் கடவுளாக இல்லையென்றால் அது நிச்சயம் முடியாது' என்று குறிப்பிட்டிருந்தார். இதுபோன்ற மோசமான, கடுமையான நிலைமையைத் தள்ளி வைத்து விடுங்கள் - பெரும்பாலான தொற்றுநோய்களுக்கு

இரண்டாவது அலை இருக்கும் என்று கூறுவதற்கு கடவுள் ஒருவர் நமக்குத் தேவைப்படுவாரா என்ன?

இறுதியில் இந்த விஷயங்களுக்கு விடிவு வரும். நிச்சயமாக அவை முடிவிற்கு வரும். ஆனால் அந்த நாளில் நம்மில் யார் பிழைத்திருக்கப் போகிறோம் என்று நமக்குத் தெரியாது. பணக்காரர்களால் எளிதாக மூச்சு விட முடியும். ஆனால் ஏழைகளால் அது முடியாது. இப்போதைக்கு நோய்வாய்ப்பட்ட, இறந்து போகும் நபர்களிடையில் நமது ஜனநாயகத்தின் எச்சம் சற்றே மிஞ்சியிருக்கின்றது. பணக்காரர்களும் பாரபட்சமில்லாமல் இந்த நோயால் வீழ்த்தப்பட்டுள்ளனர். மருத்துவமனைகள் ஆக்சிஜனைக் கேட்டு கெஞ்சிக் கொண்டிருக்கின்றன. சில மருத்துவமனைகள் நீங்களே உங்களுக்கான ஆக்சிஜனை கொண்டு வாருங்கள் எனற திட்டத்தை தொடங்கியுள்ளன. ஏற்பட்டிருக்கும் ஆக்சிஜன் நெருக்கடி குறித்த குற்றச்சாட்டிலிருந்து தங்களைத் திசைதிருப்பிக் கொள்ள அரசியல் கட்சிகள் முயன்று கொண்டிருக்கின்றன. இந்த ஆக்சிஜன் நெருக்கடி மாநிலங்களுக்கிடையில் தீவிரமான, அசாதாரணமான சண்டைகளுக்கு வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது.

இப்போது தேசிய அளவிலான பொதுமுடக்கம் அறிவிக்கப்படவில்லை என்றாலும், ரயில்களும் பேருந்துகளும் இயங்கி போக்குவரத்து வசதி கிடைத்துக் கொண்டிருக்கும்போதே தொழிலாளர்கள் வெளியேறத் துவங்கி விட்டனர். பிரமாண்டமான நாட்டின் பொருளாதார இயந்திரத்தை உருவாக்கியிருந்தாலும், நெருக்கடி என்ற ஒன்று வரும்போது தங்களை ஒருபோதும் இந்த அரசு நிர்வாகம் கண்டு கொள்வதில்லை என்பதை நன்கு அறிந்திருக்கும் இந்த தொழிலாளர்கள் இந்த முறை உடனடியாக வெளியேறி விட்டார்கள். இந்த ஆண்டு நடைபெற்றிருக்கும் வெளியேற்றம் சற்று மாறுபட்ட குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தங்கள் கிராமத்து வீடுகளுக்குள் நுழைவதற்கு முன்பு இந்த தொழிலாளர்கள் தங்கிக் கொள்வதற்கான தனிமைப்படுத்தப்பட்ட மையங்கள் என்று எதுவும் இப்போது ஏற்படுத்தித் தரப்படவில்லை. நகரத்திலிருந்து வருகின்ற வைரஸிடமிருந்து கிராமப்புறங்களைப் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும் என்ற அற்ப பாசாங்கு கூட இப்போது அரசிடம் இருக்கவில்லை.

இந்தக் கிராமங்கள் அனைத்தும் வயிற்றுப்போக்கு, காசநோய் போன்று எளிதில் சிகிச்சையளிக்கக்கூடிய நோய்களால் இறந்து போகின்ற மக்களைக் கொண்டவை. பெரும்தொற்றான கோவிட்-19ஐ எவ்வாறு அவற்றால் சமாளிக்க முடியும்? கோவிட்-19க்கான பரிசோதனைகள் அவர்களுக்கு அங்கே கிடைக்குமா? கிராமங்களில் மருத்துவமனைகள் உள்ளனவா? ஆக்சிஜன் இருக்கிறதா? அதை விட அன்பு இருக்கிறதா? அன்பைக்கூட மறந்து விடுங்கள். அக்கறையாவது இருக்கிறதா? இல்லை. ஏனென்றால் இந்தியாவிற்கான பொதுவான இதயம் இருக்க வேண்டிய இடத்தில் கடுமையான அலட்சியத்தால் நிரப்பப்பட்ட இதய வடிவிலான துளை மட்டுமே இப்போது இருந்து கொண்டிருக்கிறது.

நன்றி : வயர் இணைய இதழ்

## புதுக்கோட்டை மற்றும் கோவையில் நிவாரண உதவிகள்

புதுக்கோட்டையில் TNGEA தோழர்கள் மற்றும் சில நண்பர்களின் உதவியோடு கொரோனா ஊரடங்கு காலத்தில் 29.5.2021 முதல் கடைவீதிகளில் பசியால் வாடும் முதியவர்களுக்கு தினந்தோறும் 50 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

★★★

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் தமிழ்நாடு கல்வித் துறை நிர்வாக அலுவலர்கள் சங்கம் சார்பில் கடந்த 2.06.2021 அன்று கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா, சேத்துமடை மலைத்தொடர் நாகருத்து செட்டில்மன்ட் ஏரியா தொடர் - 1 மற்றும் சர்கார் பதி அருகே உள்ள செட்டில்மென்ட் ஏரியா தொடர் - 2 ஆகிய இரு பகுதிகளுக்கும் மொத்தம் 50 மலைவாழ் மக்கள் குடும்பங்களுக்கு அரிசி, உப்பு, மஞ்சத்தூள், சாம்பார் தூள், சீரகம், வர மல்லி, வரமிளகாய், கடுகு, ஆயில், சர்க்கரை, டீத்தூள், துவரம்பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு, தக்காளி, முள்ளங்கி, துவைக்கும் சோப்பு, பாத்திரம் விளக்கும் சோப்பு ஆகிய நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

மேலும் நிவாரணப் பொருட்கள் வாங்கிய அனைவருக்கும் கபசுர குடிநீர், முகக்கவசம் ஆகியவை வழங்கப்பட்டன. ■

சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை – கொரோனா வைரஸ் (Covid-19) நோய்த்தொற்றை தடுக்க தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் முழு ஊரடங்கு – 07.06.2021 காலை 6.00 மணி வரை முழு ஊரடங்கு கட்டுப்பாடுகள் நீட்டிப்பு – மாற்றுத் திறனாளி அரசுப் பணியாளர்கள் அலுவலகத்திற்கு வருவதிலிருந்து முழு விலக்களிக்கப்பட்டதை 06.06.2021 வரை நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–3.1)த் துறை

அரசாணை (வாலாயம்) எண்: 84

நாள்: 31.05.2021
பிலவ, வைகாசி 17,
திருவள்ளுவர் ஆண்டு, 2052.
படிக்கப்பட்டது:

1. அரசாணை (வாலாயம்) எண் 83, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–3.1)த் துறை, நாள் 24.05.2021
2. அரசாணை (நிலை) எண்.391, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.IV) துறை, நாள் 29.05.2021
3. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் ந.க.எண்.3/நிர்–2/2020, நாள் 31.05.2021

---

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் மாற்றுத் திறனாளி அரசுப் பணியாளர்களின் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு 30.05.2021 வரை மாற்றுத் திறனாளி அரசுப் பணியாளர்கள் அலுவலகத்திற்கு வருவதிலிருந்து முழுவதுமாக விலக்களித்து அரசு ஆணையிட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மாநிலம் முழுவதும் கொரோனா பெருந்தொற்றினை (COVID-19) கட்டுப்படுத்தும் நோக்கில், 07.06.2021 காலை 6.00 மணி வரை முழு ஊரடங்கானது நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வரசாணையில் ஏனைய கட்டுப்பாடுகளுடன், அத்தியாவசிய துறைகள் மட்டுமே செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், 31.05.2021 முதல் 06.06.2021 வரை மாற்றுத்திறனாளி அரசு பணியாளர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு மேற்படி ஊரடங்கு காலகட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் பணிபுரியும் மாற்றுத்திறனாளி பணியாளர்கள் மற்றும் பிற துறைகளில் பணிபுரியும் மாற்றுத்திறனாளி அரசு பணியாளர்கள் அலுவலகத்திற்கு வருவதிலிருந்து முழுவதுமாக விலக்களித்து ஆணை வழங்கிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கருத்துருவினை கவனமாக பரிசீலித்த பின்னர் அரசானது, மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்களுக்கு ஏற்கனவே 30.05.2021 வரை அலுவலகத்திற்கு வருவதிலிருந்து முழுவதுமாக விலக்களித்துள்ளதை மேலும் நீட்டிப்பு செய்து 06.06.2021 வரை மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்கள் அலுவலகத்திற்கு வருவதிலிருந்து முழுவதுமாக விலக்களித்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ. இறையன்பு
அரசு தலைமைச் செயலாளர்.

# "தமிழில் கல்வி பயிலாமல் தமிழ்மொழிக்கோ, எழுத்தாளனுக்கோ, தமிழ் இலக்கியத்திற்கோ இங்கு இடமில்லை!"





இந்த கொரோனா கொடுந்தொற்று காலத்தில் எப்போதும் இல்லாத அளவுக்கு பல்வேறு துறைகளில் ஆளுமை செலுத்தி வந்த கலைஞர்கள் அதிக அளவில் மறைந்து போவது அத்தகைய கலைஞர்களை கொண்டாடும் உள்ளங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. சென்ற மாதத்தில் (மே 2021) இறந்துபோனவர்களில் மிகுந்த கவனிப்புக்கு உரியவர்களில் ஒருவராக இருந்தவர் கரிசல்காட்டு மன்னர் கி.ராஜநாராயணன். தமிழக அரசு இதுவரை எந்த எழுத்தாளனுக்கும் இல்லாத மரியாதையை அவருக்கு செய்திருக்கிறது. அவரை அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்ததுடன் அவருக்கு உருவச் சிலையும் எழுப்புவதாக அறிவித்திருக்கிறது. கி.ராஜநாராயணன் வேறு நாட்டில் பிறந்திருந்தால் அவருடைய எழுத்துக்கள் உலகின் அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலகமே கொண்டாடி இருக்கும் என்றும் அவர் தமிழ்நாட்டில் பிறந்ததால் வறுமையுடனும் ஏழ்மையுடனும் வாழ்ந்துகொண்டே கலைக்கும் சேவை செய்ய வேண்டியிருந்தது என்பதை அவருடைய நண்பர்களில் ஒருவரும் திரைப்பட இயக்குநருமான தங்கர் பச்சான் தனக்கே உரிய பாணியில் இந்து தமிழ் திசை நாளேட்டில் இப்படி சுட்டிக்காட்டுகிறார்:-

"தமிழகத்தில் எழுத்தாளனின் நிலை எவருக்காவது தெரியுமா? அது குறித்த அக்கறையும், பொறுப்பும் எவருக்காயினும் இருக்கின்றதா? பாரதியையும், புதுமைப் பித்தனையும் வறுமையிலேயே வைத்திருந்து நோயுடன் கொன்றதை அறிந்திருக்கவில்லையா? எழுத்தாளர்கள் அனைவரும் வாழும்போது யாருக்காகவோ எழுதுகிறார்கள் என நினைப்பவர்களுக்கு எழுத்தாளனைப் பற்றி அறிய என்ன அக்கறை இருக்கிறது?

அறுபது ஆண்டுகள் வேறு எந்தத் தொழிலும் செய்யாமல் மாதச் சம்பளம் பெறாமல், மாய்ந்து மாய்ந்து எழுதிய கி.ரா.வுக்கு வாழ்நாளில் அவர் எழுதிய ஐம்பதுக்கும் மேற்படிட்ட படைப்புகளுக்கும் சேர்த்து வருமானமாக எவ்வளவு தொகை கிடைத்திருக்கும் என எண்ணுகிறீர்கள்? அதைப்பற்றி கவலைப்படாதவர்களிடம் சொல்லி என்ன ஆகப் போகிறது. சொந்தமாக பெரிதாக நிலபுலன்களும் இல்லாமல், சிறிதளவு இருந்தும், அதிலிருந்து ஒரு ரூபாய் கூட வருமானம் இல்லாமல், புதுச்சேரி அரசாங்கம் கருணையினால் குறைந்த வாடகைக்கு வழங்கிய 400 சதுர அடி கொண்ட அரசுக் குடியிருப்பில்தான் கி.ரா. 28 ஆண்டுகாலம் வாழ்ந்து மறைந்தார். ஒரு மாபெரும் மேதையின் வாழ்வு இவ்வாறுதான் முடிந்திருக்கிறது.

100 ரூபாய் விலையுடைய புத்தகம் விற்றால் அதைப்படைத்த எழுத்தாளனுக்கு 10 சதவீதம்தான் உரிமைத் தொகையாக கிடைக்கும். அது கூட அதை பதிப்பிக்கும் பதிப்பகம் நேர்மையான வழியில் கணக்கு காட்டினால் மட்டுமே கைக்கு வரும். நாமெல்லாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் தமிழகத்தில் ஒரு தீவிர எழுத்தாளனின் நூல் இரண்டாயிரம் படிகள் விற்றால் அது மாபெரும் வெற்றியாகக் கருதப்படுகிறது. ஒரு தரமான எழுத்தாளன் வாழ்நாள் முழுக்க எழுதினாலும் 25 நூல்களுக்கு மேல் வெளிக் கொண்டுவர முடியாது. அதில் கி.ரா.தான் உச்சம். ஒரு மூன்றாம் தரமான தமிழ்த் திரைப்படம் வெளியான அடுத்த நாளே எத்தனை கோடி வசூல் செய்தது எனும் கணக்கை முந்தித் தருவதற்கு அலையும் ஊடகங்களும், அதைக் கேட்டு பெருமைப்படடுக் கொள்ளும் ரசிகர்களாகிய மக்களும் இருக்குமிடத்தில் இதையெல்லாம் பேசுவது பெருங்குற்றம்தான்.

எந்தெந்த படைப்புகள் மக்களிடத்தில் சேர வேண்டுமோ, அவ்வாறான நூல்கள் அரசு பொது நூலகங்களில் சென்று சேர்வதில்லை. அப்படியே பெறப்படும் நூல்களை வைப்பதற்கு அலமாரி



இன்றி செல்லரித்துக் கிடக்கின்றன. அரசு மதுபானக் கடைகளில் செய்து தரப்படும் வசதிகளில் பத்தில் ஒரு பகுதிகூட ஒரு நூலகத்திற்கு செய்து தருவதில்லை. அரசு நூலகங்கள் பதிப்பாளர்களிடமிருந்து வாங்கும் முறைகளில் இந்த புதிய அரசானது இலக்கியபூர்வமான அணுகுமுறையைக் கையாள வேண்டும் என்று அனைவரும் எதிர்பார்க்கிறார்கள்.

இறுதிச் சடங்கில் ஒரு எழுத்தாளனுக்கு அரசு மரியாதை கிடைப்பதாலோ, இறந்த பின் அவனுக்கு உருவச்சிலை எழுப்புவதாலோ மட்டும் அவனது எண்ணங்கள் நிறைவேறுவதில்லை. அவனது படைப்புகள் அவன் நினைத்தபடி மக்களிடத்தில் சென்று சேர்ந்துவிட வேண்டும் என்றே ஒவ்வொரு அசல் எழுத்தாளனும் விரும்புவான். மற்றபடி வாழும்போது தரப்படும் விருதுகளின் பெருமையெல்லாம் சில நாட்களுக்குத்தான்.

கி.ரா.போன்ற அசல் எழுத்தாளர்களின் படைப்புகள் மக்களுக்கு சேர இனி வருங்காலங்களில் ஒரே வழிதான் உள்ளது. அதுதான் பக்கத்து மாநிலங்களில் உள்ளதுபோல் கட்டாய தாய்மொழி வழிக்கல்வி. இனிவரும் தலைமுறை தமிழில் கல்வி பயிலாமல் தமிழ்மொழிக்கோ எழுத்தாளனுக்கோ தமிழ் இலக்கியத்திற்கோ இங்கு இடமில்லை. இப்பொழுது உள்ளது போல் தொடர்ந்தால் எதிலும் தமிழ் நடைமுறையில் இல்லாமல் தமிழ்நாடு என எதிர்காலத்திலும் வழங்கப்படும். தமிழர்கள் என அழைத்துக் கொள்ளும் தமிழினம் ஆங்கில எழுத்துக்களின் மூலம் தமிழை எழுதுவார்கள். தமிழைப் படிப்பார்கள். ஆங்கிலம் பிறமொழி பேசி தமிழ் மாநாடும் நடத்துவார்கள்."

இந்து தமிழ்திசையில் வந்த கட்டுரையின் சுருக்கப்பட்ட தொகுப்பு

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கள்ளக்குறிச்சி மாவட்ட தலைவர் தோழர் ஆனந்த கிருஷ்ணன் முதலைமச்சரின் கொரோனா நிவாரண நிதிக்கு ரூ.10,001ஐ வழங்கி உள்ளார்.*

# தொழிலாளர் தத்துவம்

ஆட்சியில் இருக்கும் தத்துவம் என்பது ஆளும் வர்க்கத்தின் தத்துவமே.

அரசு என்பது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை ஆளும் வர்க்கம் சுரண்டுவதற்காக கருவி.

அரசு என்பது நிரந்தர ராணுவம். போலீஸ் நீதிமன்றம் சிறைச்சாலை அதிகார வர்க்கம் ஆகியவற்றை உறுப்புகளாகக் கொண்டது.

அரசு என்பது ஆளும் வர்க்கத்திற்குத்தான் விசுவாசமானது.

ஆகவே ஒவ்வொரு தொழிலாளியும் தான் வாழும் சமூக அமைப்பைச் சரிவர புரிந்து கொள்ள வேண்டுமென்றால், அந்தச் சமூக அமைப்பில் தனது நிலைமையை அறிந்துகொள்ள வேண்டுமென்றால், தனது துன்ப துயரங்களுக்கு விடியல் எங்கிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டுமென்றால் தொழிலாளி வர்க்க தத்துவத்தை தெரிந்துகொள்ள வேண்டியது மிகமிக அவசியம்

பாவேந்தர் பாரதிதாசன் தளை ஆறு என்ற தன்னுடைய பாடலில் பின்வருமாறு கூறுகிறார்:

தொழில் அறிந்த ஏழை மக்கள்
தொழில் புரிந்து செல்வவர்பால்
அழிவிலா முதல் கொடுக்க
அம்முதற்பணத்தினால்
பழி மிகுந்த அரசமைத்துப்
படைகள் தம்மை ஏவியே
தொழில் புரிந்த ஏழை மக்கள்
சோற்றிலே மண் போடுவார்.


- ***மங்களபாண்டியன்***

**கோவிட்-19 நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க முகக்கவசம் அணிவோம்!**

**===**

**இரத்த தானம் செய்வோம்! உயிர்களைக் காப்போம்!**

# தொடங்கிவிட்டதா தொழில்நுட்ப பிரபுத்துவம்?



மை டியர் காம்ரேட்ஸ்,

சமூக வலைத்தளங்கள், ஓடிடி தளங்கள், செய்தி இணையதளங்களைக் கட்டுப்படுத்த மத்திய அரசு கடந்த பிப்ரவரியில் புதிய ஒழுங்கு விதிகளை அறிவித்தது. புதிய விதிகளை ஏற்றுக்கொள்ள சமூக வலைத்தளங்களுக்கு 3 மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டது. மே 25ஆம் தேதி இதற்கான காலக்கெடு முடிந்துள்ள நிலையில் வாட்ஸ்ஆப் நிறுவனம் இந்த விதிமுறைகளை எதிர்த்து டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. பேஸ்புக், இன்ஸ்டாகிராம் நிர்வாகங்கள் இந்த சட்டதிட்டங்களை ஏற்று செயல்படுவது குறித்து மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. ட்விட்டர் நிறுவனம் இது இந்தியாவில் கருத்து சுதந்திரத்திற்கு எதிராக எடுக்கப்படும் அச்சுறுத்தல் என தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கை கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான அச்சுறுத்தல்தானா என்பது குறித்து சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் மத்தியில் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. தனிப்பட்ட நபர்கள் அரசாங்கங்களையும், அதன் நடவடிக்கைகளையும் எதிர்த்து சமூக வலைத்தளங்களில் வெளியிடும் பதிவுகள் ஆளும் அரசாங்களுக்கு எதிரான மனநிலையை மக்களிடம் தோற்றுவித்துவிடும் என்ற அச்சத்தில் இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாகவும், இனிமேல் இத்தகைய கருத்துக்களை மக்கள் சுதந்திரமாக வெளியிட இந்த விதிமுறைகள் மூக்கணாங்கயிறு மாட்டியுள்ளதாகவும் ஒரு தரப்பில் கூறப்படுகிறது. மற்றொரு தரப்பில் நாட்டின் ஒருமைப்பாடு, இறையாண்மைக்கு எதிராக கருத்துக்கள் வெளியிடுவோர், வன்முறையைத் தூண்டுவோர், பாலியல் வன்கொடுமையை ஊக்குவிப்போரை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவே புதிய விதிகள் வகுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. கருத்துச் சுதந்திரம் -எதிர்- நாட்டின் இறையாண்மை என்ற கத்திச்சண்டையில் பறக்கும் தீப்பொறி ஒரு பெரும் காட்டை அழிக்கும் பெருந்தீயின் ஆரம்பம் மட்டுமே என்கின்றனர் பொருளாதார வல்லுநர்களும், அரசியல் வரலாற்று ஆய்வாளர்களும். இந்தப் பெருந்தீயின் பெயர் ''தொழில்நுட்ப பிரபுத்துவம்'' என்கின்றனர். புதிதாக உருவாகியிருக்கும் இந்தப்பெயரின் பொருளை புரிந்துகொள்ள மூன்று விஷயங்களை உங்கள் முன் வைக்கிறேன்.

முதலாவது, கடந்த 70 ஆண்டுகளுக்கு முன்பு ரயில் நிலையங்களில் இருந்து பக்கத்தில் உள்ள ஊர்களுக்குப் போக முக்கிய பயணப் போக்குவரத்தாக குதிரை வண்டிகள் இருந்தன. சில செல்வந்தர்கள் பத்து பதினைந்து வண்டிகளை தயார் செய்து அதை நாள் வாடகைக்கு விட்டனர். ஒரு குதிரை வண்டியின் வாடகை ஒரு நாளைக்கு ரூ.5/- என்றால், அதற்கு மேல் வரும் தொகையை வாடகைக்கு வண்டி எடுத்து ஓட்டும் தொழிலாளி எடுத்துக் கொள்ளலாம். பெரும்பாலான ரயில் நிலையங்களில் இது இருந்தது.

இரண்டாவது, ஒரு பதினைந்து இருபது ஆண்டுகள் கழிந்தன. சென்னை போன்ற தலைநகரங்களில் விமான சேவையை பயன்படுத்துபவர்கள் எண்ணிக்கை உயர்ந்ததால் டாக்ஸி வண்டிகள் பெருகின. ஒன்றிரண்டு வண்டிகள் தவிர பெரும்பாலான டாக்ஸிகள் ஒரு குறிப்பிட்ட தனியாரின் வண்டிகளாக இருந்தன. இவை ரயில் நிலையங்களிலும் சவாரிக்கு நின்ற போது குதிரை வண்டிகளின் சவாரி குறைந்து பிறகு குதிரை வண்டிகள் பயன்பாடு மறைந்து போனது. டாக்ஸி டிரைவர்களும் ஒரு நாளைக்கு இவ்வளவு வாடகை என்று கொடுத்து வண்டி எடுத்து சவாரி ஓட்டி பிழைத்து வந்தனர். அதன்பிறகு வங்கிகள் நலிந்தோர் தொழில் தொடங்க, சிறுதொழில் செய்ய கடன் வழங்கும் திட்டத்தை அறிவித்தன. பிறகு தொழிலாளிகளே சொந்த வண்டிக்காரர்கள் ஆகினர். வங்கியில் கார் வாங்க கடன் வாங்கி அதனை மாதத் தவணைகளில் திருப்பி செலுத்தினர். இதனால் தொழிலில் தொய்வு ஏற்பட்டதை உணர்ந்த பணக்காரர்கள் வாடகை கார் விடுவதை கேப்ஸ் ஆக மாற்றினர்.

மூன்றாவது, தற்போது கார் அல்லது பில்டிங் உங்களுடையது. உங்களுடன் பிரபல தனியார் நிறுவனங்களிள் ஒன்று ஒப்பந்தம் செய்து கொள்ளும். உங்கள் கார் அல்லது பில்டிங்கில் ஒப்பந்தம் செய்துகொண்ட தனியார் நிறுவனத்தின் பெயர் பொறித்த ஸ்டிக்கர் அல்லது பெயிண்டிங் வரையப்படும். ஆன்லைன் மூலம் உங்கள் கார்களுக்கோ பில்டிங் அறைகளுக்கோ வாடிக்கையாளர்கள் அனுப்பப்படுவார்கள். வாடிக்கையாளரிடம் இருந்து தொகையை நிறுவனம் வசூலித்துக் கொள்ளும் மாதந்தோறும் உங்களுக்கு சேர வேண்டிய வாடகை தொகை சதவீதக் கணக்கில் உங்களுக்கு வழங்கப்படும். கார் உங்களுடையது, பில்டிங் உங்களுடையது, உழைப்பு உங்களுடையது. ஆனால் லாபம் மட்டும் செல்வந்தர்களுக்கு.

மேற்சொன்ன மூன்று அம்சங்களும் அப்படியே இருக்கட்டும். இப்போது நிலப்பிரபுத்துவ காலகட்டத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு நிலவுடைமையாளரின் நிலத்தில் விவசாயிகள் பயிரிட்டுக்கொள்வார்கள் அதற்கு ஈடாக அவருக்கு வாடகை செலுத்துவார்கள். இங்கே லாபம் என்பது வாடகை மூலம் பெறபப்படுகிறது. இதுவே முதலாளித்துவ சமூகத்தில் விவசாயிகளிடம் நெல்லும் உரமும் கொடுக்கப்படும் அதை விவசாயிகள் தங்கள் நிலத்தில் உற்பத்தி செய்வார்கள். எவ்வளவு உற்பத்தி செய்கிறார்களோ அதற்கு ஈடாக அவர்களுக்கு சதவீத அடிப்படையில் தானியமோ அல்லது பணமோ வழங்கப்படும். இங்கே லாபமானது மிகை உற்பத்தி மூலம் பெறப்படுகிறது. கொஞ்சம் படிப்பதை நிறுத்திவிட்டு மேலே மூன்றாவதாக சொன்ன அம்சத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் என்ன வித்தியாசம் என்று யோசித்துப் பாருங்கள். ஒன்றுமில்லை. அந்தக்கால முதலாளித்துவமும், நிலப்பிரபுத்துவமும் தற்போது தொழில்நுட்ப பிரபுத்துவமாக மாறியிருக்கிறது. இதனால் நமக்கு என்ன பாதிப்பு நேர்ந்துவிடும்? என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

இன்னும்கூட கொஞ்சம் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். உங்களிடம் வீடு இருக்கிறது, கார் இருக்கிறதென்றால் அவை உங்களுக்கான உரிமை மட்டுமல்ல ஏர்பிஎன்பி, ஓயோ, ஊபர், ஓலா போன்ற நிறுவனங்களுக்கான மூலதனங்களும் கூட. மேற்சொன்ன நிறுவனங்களிடம் வாகனங்களோ, வீடுகளோ, ஹோட்டல்களோ கிடையாது. ஆனால் நீங்கள் அவற்றுடன் டை–அப் வைத்துக்கொள்வதன் மூலம் அவை லாபம் பெறுகின்றன. இன்றைய தேதியில் நாம் ஏதாவது ஊருக்கு போய் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டியிருந்தால் நாம் அனைவரும் முதலில் அந்த ஊரில் என்ன நல்ல தங்குமிடம் அல்லது ஹோட்டல் உள்ளதா என்று ஆன்லைனில் தேடுகிறோம். ஓயோ, ஏர்பிஎன்பி போன்ற தளங்களில் சென்று தேடுகிறோம். குறிப்பிட்ட நிறுவனங்கள் தொழில்நுட்ப வசதி மூலமாக ஒவ்வொரு சிறு, நடுத்தர மற்றும் முக்கிய நகரங்களில் தங்குமிடங்களையும் கார்களையும் அந்தந்த இடங்களில் உள்ள நபர்களுடன் டை–அப் செய்து ஆன்லைன் மூலம் தரவுகளை இணைத்துள்ளதால் பயனாளர்கள் இத்தகய தளங்களை பயன்படுத்தியே ஆக வேண்டிய சூழல் உள்ளது. இவர்களின் பயன்பாடுகள் அதிகரிக்க அதிகரிக்க மேலும் அதிக தரவுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தத் தரவுகளைப் பயன்படுத்தி மேற்சொன்ன நிறுவனங்கள் அபரிமிதமான லாபத்தை அடைகின்றன. நிலபிரபுத்துவ காலகட்டத்தில் இருந்த பண்ணை அடிமைகள் போல, தற்போது மக்கள் தொழில்நுட்பக் கட்டமைப்பின் அடிமைகளாக மாறுவதும் பெருநிறுவனங்களுக்கு மூலதனத்தைப் பெருக்கித் தருவதுமான ஏற்பாடுகள் மெல்ல மெல்லத் தொடங்க ஆரம்பித்துவிட்டன. இது தொழில்நுட்ப பிரபுத்துவத்தின் (Techno Fedualism) ஆரம்பம் என்று பொருளாதார அறிஞர்கள் கூறுகிறார்கள். இதன்மூலம் கடந்த நாற்பது ஆண்டுகளாக உலகை ஆண்டுவந்த தாராளவாத பொருளாதாரம் முடிவுக்கு வந்துள்ளதாக அவர்கள் கணிக்கிறார்கள். இப்போது தொடங்கியிருக்கும் தொழில்நுட்ப பிரபுத்துவம் வணிகலாபத்தோடு மட்டும் நின்றுவிடக்கூடியது அல்ல. அவை அரசியல் அதிகாரத்தை நோக்கியும் நகர்ந்து வரும் பேராபத்தைக் கொண்டிருப்பதாக எச்சரிக்கிறார்கள்.


இன்றைய உலகின் பெருநிறுவனங்களைப் பட்டியலிடும்போது அவற்றில் தொழில்நுட்ப நிறுவனங்களே ஆதிக்கம் செலுத்துவதை நாம் அறியலாம். பேஸ்புக், கூகுள், ஆப்பிள், மைக்ரோசாஃப்ட், அமேசான் ஆகிய ஐந்து நிறுவனங்கள் உலகின் மிகப்பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. அரசுகளால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு இந்நிறுவனங்களின் வளர்ச்சி இருந்து வருகிறது. இதனால் இந்நிறுவனங்கள் அரசுகள் சொல்வதை கேட்காமல் போகக்கூடிய நிலையையும், அரசாங்க சட்டத்தை மறுதலிக்கும் போக்கையும் அரசாங்கங்கள் எதிர்நோக்க வேண்டிய அபாயம்

உள்ளதை பொருளியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

உதாரணத்திற்கு சிலவற்றைப் பார்ப்போம். 2021 பிப்ரவரி மாதத்தில் ஆஸ்திரேலிய அரசாங்கம் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. அதன்படி பேஸ்புக், கூகுள் போன்ற பெரும் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்கள் தளத்தில் செய்தி நிறுவனங்களின் இணைப்புகள் பகிரப்படுவதற்கு, அந்தந்த செய்தி நிறுவனங்களுக்கு கட்டணம் செலுத்த வேண்டும் என்றது. பேஸ்புக் நிறுவனம் இதற்கு மறுத்துவிட்டது. தங்களுடைய மொத்த வருவாயில் செய்தி நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் மிக மிகக் குறைவு. அதனால் அந்த செய்தி நிறுவனங்களுக்கு கட்டணம் செலுத்துவதற்குப் பதிலாக தங்கள் தளத்தில் செய்திகள் பகிரப்படுவதை நிறுத்துவதாகக் கூறி அதன் தளத்தில் செய்திகள் பகரப்படுவதற்கான வசதியை நிறுத்திவிட்டது. இந்த நிகழ்வானது ஆஸ்திரேலிய அரசுக்கு மட்டுமல்ல ஏனைய நாடுகளுக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பிறகு ஆஸ்திரேலிய அரசு பேஸ்புக், கூகுள் நிறுவனங்களுடன் பேசி அந்த சட்டத்தில் சில தளர்வுகளை அறிவித்தது. இந்த நிகழ்வின் மூலம் அரசை விடவும் தாங்கள் பலம் பொருந்தியவர்கள் என்று தொழில்நுட்ப நிறுவனங்கள் உணர்த்தியுள்ளன.

இன்னொரு உதாரணம் பார்ப்போம். அமெரிக்கத் தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து டிரம்ப் ஆதரவாளர்கள் அமெரிக்க நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தினர். பலர் சமூக வலைத்தளங்களில் வன்முறை பிரச்சாரம் மேற்கொண்டனர். உடனடியாக பேஸ்புக், ட்விட்டர் நிறுவனங்கள் டிரம்ப்பின் கணக்கை முடக்கின. அதேபோல் வன்முறையைத் தூண்டும் பதிவாளர்களின் கணக்குகளும் முடக்கப்பட்டன. டிரம்ப்பின் நடவடிக்கைகள் சரியா? தவறா? என்பதல்ல விவாதம். தொழில்நுட்ப நிறுவனங்கள் நினைத்தால் ஒரு நாட்டின் அதிபரையே மக்களுடனான தொடர்பிலிருந்து துண்டித்துவிட முடியும் என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

இந்தியாவிலும் இதுபோன்ற நிகழ்வு கடந்த பிப்ரவரி (2021) மாதத்தில் விவசாயிகள் போராட்டத்தின்போது நடந்தது. விவசாயிகள் போராட்டம் உக்கிரமடைந்த நேரத்தில், போராட்டத்தை தூண்டும் விதமான பதிவுகளை நீக்க வேண்டும் என்று ட்விட்டரிடம் இந்திய அரசு கேட்டது. அதற்கு ட்விட்டர், 'பயனாளர்களின் கருத்துச் சுதந்திரத்தில் தலையிட முடியாது' என்று



கூறி பதிவுகளை முதலில் நீக்க மறுத்துவிட்டது. பிறகு விவகாரம் தீவிரம் அடைந்ததும் சர்ச்சைக்குரிய பதிவுகளை ட்விட்டர் நீக்கியது. ஆரம்பத்தில் இந்திய அரசின் அழுத்தத்திற்கு ட்விட்டர் நிறுவனம் பணியாமல் இருந்தது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. தற்போது, முதல் பத்தியில் சொல்லப்பட்டது போல இந்திய அரசு வகுத்துள்ள விதிமுறைகளை வாட்ஸ்ஆப் மற்றும் ட்விட்டர் நிறுவனங்கள் எதிர்க்கின்றன.

ஆனால் இந்த சுதந்திரத் தன்மை தொழில்நுட்ப நிறுவனங்களின் பல பரிமாணங்களில் ஒன்றுதானே தவிர முழுமையான முகம் அல்ல என்கிற யதார்த்தத்தையும் உதறிவிட முடியாது. இத்தகைய தொழில்நுட்ப நிறுவனங்கள் சூழலுக்கு ஏற்ப அரசின் கைப்பாவையாகவும் செயல்படுகின்றன. சில அரசாங்கங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்கள் நாடுகளின் பிராந்திய எல்லைக்குள், அந்நாட்டு அரசுகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அனுமதித்துள்ளன. தொழில்நுட்ப நிறுவனங்களின் மீதான கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு வழியே தங்கள் மக்களை கட்டுப்படுத்த முடியும் என்பதற்கு சீனாவும், தென்கொரியாவும் சிறந்த எடுத்துக்காட்டுகள். அந்நாடுகள் தொழில்நுட்ப நிறுவனங்களை தங்களின் அரசியல் கருவியாக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதேபோல் தங்கள் நாடுகளுக்குத் தேவையான வகையில் சமூக வலைத்தளங்கள் குறித்த புதிய சட்ட திட்டங்களை விதிமுறைகளையும் அமெரிக்கா, பிரிட்டன். ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் இயற்றியுள்ளன. அதன் தொடர்ச்சிதான் இப்போது மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள புதிய ஒழுங்குவிதிமுறைகள். இந்த விதிமுறைகளால்

தகவல் தொழில்நுட்ப பெரு நிறுவனங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைக்கமுடியுமா? அது எவ்வளவு காலத்திற்கு என்ற கேள்விகள் பூதாகரமாகி வருகின்றன.

2008ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு நிதி நிறுவனங்களில் ஏற்பட்ட சரிவே முக்கிய காரணமாக அமைந்தது. அடுத்த பொருளாதார நெருக்கடி பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் வழியாக ஏற்படும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். ஏனெனில் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயல்பாடுகள் கண்காணிக்க முடியாத அளவுக்கு சிக்கல் நிறைந்ததாக உள்ளன. வரியிலிருந்து தப்பிப்பதற்காக இந்த நிறுவனங்கள் தங்கள் சொத்துக்களை சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் உள்ள வங்கிகளில் பாதுகாக்கின்றன. நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சிப்பாதையில் செல்ல வேண்டுமானால் உற்பத்தித் துறையில் முதலீடுகள் அதிகரிக்க வேண்டும். ஆனால் இந்தியாவில் உள்ள பிரச்னை என்னவென்றால் உற்பத்தித் துறையில் முதலீடுகள் குறைந்து, சேவைத் துறையில் முதலீடுகள் அதிகரித்து வருவதாகும். இந்தப்போக்கு நீண்டகால அளவில் பொருளாதாரத்தில் பெரும் நெருக்கடியைக் கொண்டு வரும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இதன்காரணமாக அரசாங்கங்கள் தொழில்நுட்ப பிரபுத்துவத்தின் கைப்பாவையாக மாறிவிடும் அபாயங்களும் உள்ளன என்றும் அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

தொழில்நுட்ப பிரபுத்துவத்தின் கைஓங்கினால், அது தனிமனித அளவிலும், சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியிலும் தன் ஏகபோக அதிகாரத்தைச் செலுத்த ஆரம்பித்துவிடும். இதன் எல்லை மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிப்பதற்கான சுதந்திரவெளியை முடக்குவதில் போய் நிற்கும். நிலபிரபுத்துவ காலகட்டத்தில் இருந்த பண்ணை அடிமைகள் போல், இனிமேல் மக்கள், தொழில்நுட்ப பிரபுத்துவத்தின் அடிமைகளாக மாறுவதும், பெருநிறுவனங்களுக்கு மூலதனத்தைப் பெருக்கித் தருவதுமான போக்கும்தான் உருவாகும்.

இந்த ஏகபோக அதிகாரப் போக்கை தடுப்பதற்கான வழிமுறைகளை, கட்டுப்பாடுகளை அரசாங்கங்கள் தங்கள் அரசியல் லாபங்களுக்காக மட்டுமல்லாமல் மக்களின் தனிமனித கருத்துச் சுதந்திரத்தையும், உரிமையையும் காப்பதாக இருக்க வேண்டும். விதிக்கப்படும் தொழில்நுட்ப நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகள், அவற்றின் வணிகச்செயல்பாடு மற்றும் தகவல்களை கையாள்வது தொடர்பான நடைமுறைகளை நெறிப்படுத்துவதாக இருக்க வேண்டுமே தவிர, மக்கள் கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரவெளியை முடக்குவதாக அமைந்துவிடக்கூடாது. ஆனால் இதுவரை நிகழ்ந்திருக்கின்ற நிதர்சனங்கள் அந்த நம்பிக்கையை ஏற்படுத்துவனவாக இல்லை. இந்தியாவை ஆண்ட அரசாங்கங்கள் அனைத்தும் கார்ப்பரேட்டுகளின் சேவகர்களாக இருந்து தொழிற்சங்க உரிமைகள் பலவற்றை கடந்த நாற்பதாண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாக பிடுங்கி எறிந்திருக்கின்றன. ஓய்வூதியம், நிரந்தர வேலை வாய்ப்புகள் போன்ற வாழ்வாதார உரிமைகள் பறிக்கப்பட்டு நாற்பது தொழிலாளர் நலச் சட்டங்கள் நான்காகச் சுருக்கப்பட்டு அரசுத்துறைகள் தனியார்மயமாக்க நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்த நிலையில் இப்போது இருக்கும் அரசாங்கம் இந்திய மக்களை தொழில்நுட்பக் கட்டமைப்பின் அடிமைகளாக மாற்றிவிடாது என்பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை.

எனவே, தொழிற்சங்கத் தோழமைகளே, இனி நமது போராட்டங்கள் கூலி உயர்வுக்காகவும், போனசுக்காகவும், பறிபோன உரிமைகளுக்காகவும் மட்டுமில்லாமல் தொழில்நுட்பப் பிரபுத்துவத்தின் ஏகபோக அதிகாரப் போக்கை அதன் ஆரம்ப நிலையிலேயே பிடுங்கி எறிவதற்கான ஆயுதங்களாகவும் மாற்றியமைக்கப்பட வேண்டும். தொழில்நுட்ப பிரபுத்துவத்தின் அரசியலை, உழைக்கும் வர்க்கத்திற்கு புரிய வைக்க வேண்டிய பெரும் பொறுப்பை ஏற்று நாம் செயலாற்றுவதைப் பொறுத்தே நாட்டு மக்களுக்கான கருத்துச் சுதந்திரமும், உரிமைகளும் உயிர்ப்பொருளாக இருக்கும்.

**- ஜிஜி**

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com